
விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka




வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பன்னிரண்டு

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2039 ஆடி 28 செவ்வாய்க்கிழமை (12.08.2008) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 237

# மோதல்கள் இடம்பெறும் பகுதிகளின் அரச அதிபர்களுடன் இராணுவம் பேச்சு

## அம்பாறையில் தாக்குதல் அதிகாரி உட்பட மூவர் பலி

(அம்பாறை)

அம்பாறை கஞ்சிக்குடிச்சாறு பகுதியில் சிறப்பு அதிரடிப் படையினர் மீது தமிழீழ விடுதலைப்புலிகள் நடத்திய தாக்குதலில் உயர் அதிகாரி உட்பட படையினர் மூவர் கொல்லப்பட்டுள்ளனர். மூவர் காயமடைந்துள்ளனர்.

இது தொடர்பில் அம்பாறை மாவட்ட விடுதலைப்புலிகள் தெரிவித்துள்ளதாவது,

கஞ்சிக்குடிச்சாறு வேப்பையடி சிறப்பு அதிரடிப்படை முகாமிலிருந்து ஒரு கிலோமீற்றர் தூரம் முன்னேறி நிலை கொண்டிருந்த சிறப்பு அதிரடிப் (12 ஆம் பக்கம் பார்க்க)

## அத்தியாவசிய பொருள்களின் விநியோகம் குறித்து ஆராய்வு

(வவுனியா)

வடக்கே வவுனியா, மன்னார், கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்த அரசாங்க அதிபர்களுக்கும் வவுனியாவிலுள்ள வன்னிப் பிரதேச இராணுவத் தலைமையக உயர் அதிகாரிகளுக்குமிடையில் நேற்று முக்கிய சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது. இக் கூட்டத்தில் வன்னிப் பிரதேசத்திற்கு அத்தியாவசியப் பொருள்களைச் சீரான முறையில் அனுப்புவது குறித்துக் கலந்துரையாடப்பட்டுள்ளது. (12 ஆம் பக்கம் பார்க்க)

## புதுக்குடியிருப்பில் விமானத் தாக்குதல்

(கிளிநொச்சி)

புதுக்குடியிருப்பில் மக்கள் குடியிருப்புக்களை இலக்கு வைத்து விமானப் படையின் விமானங்கள் நடத்திய குண்டுத் தாக்குதலில் பொது மகன் ஒருவர் காயமடைந்துள்ளார்.

புதுக்குடியிருப்பு மக்கள் குடியிருப்புக்கள் மீது நேற்றுக் காலை 8.20 மணியளவில் கிபீர் விமானங்கள் குண்டுத்தாக்குதலை நடத்தின. இதில் ஜி.சசிதமலர் என்பவர் காயமடைந்துள்ளார்.

பொன்னம்பலம், (12 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்ப்பாணத்தில் சிறுவர் இல்லங்களை நாடுவோரின் எண்ணிக்கை அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டத்தில் சிறுவர் இல்லங்களில் சேர்க்கப்படுவோரின் எண்ணிக்கை கடந்த சில மாதங்களாக அதிகரித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

எனினும் சிறுவர் இல்லங்களில் சேர்க்கப்படும் சிறுவர்களுக்காக 'சிறுவர்களுக்கு உகந்த சூழல்–குடும்ப சூழலே' என்ற திட்டத்தின் கீழ் சேவ் த சில்ட்ரன் இன் ஸ்ரீ லங்கா அமைப்பு மேற்கொண்டு வந்த பணிகள் கடந்த மே மாதத்துடன் முடிபடைந்துள்ளன.

இந்தக் காலப் பகுதிக்குள் சேவ் த சில்ட்ரன் இன் ஸ்ரீ லங்கா அமைப்பினால் 403 சிறுவர்கள் அவர்களின் பெற்றோர்களுடன் மீள் இணைக்கப்பட்டுள்ளார்கள். எனினும் மே மாதத்தின் பின்னர் சிறுவர் இல்லங்களுக்கு வந்த சுமார் 408 சிறுவர்களை பராமரிக்க முடியாமல் போயிருப்பதாக அந்த அமைப்புத் தெரிவித்துள்ளது.

இந் நிலையில் (12 ஆம் பக்கம் பார்க்க)

## மடு மாதாவை வழிபடத் தினமும் 200 பக்தர்களுக்கு அனுமதி

### பாதுகாப்பு அமைச்சு அறிவிப்பு

(கொழும்பு)

மடுத் திருப்பதி பிரதேசத்திற்குத் தினமும் 200 பக்தர்கள் சென்று வழிபடுவதற்குப் பாதுகாப்பு அமைச்சு அனுமதி வழங்கியுள்ளது.

இன்றுமுதல் எதிர்வரும் 17 ஆம் திகதி வரை மடு புனிதத் தல பிரதேசத்திற்குப் பொது மக்கள் பகல் வேளையில் பிரவேசிக்க முடியும் எனவும் அங்கு சமய வழிபாடுகளில் ஈடுபட முடியும் எனவும் பாதுகாப்பு அமைச்சு நேற்றிரவு அறிவித்துள்ளது.

மடுத் தேவாலயத்தை சூழவுள்ள பிரதேசங்களில் குறிப்பிட்ட பகுதிகளில் மட்டுமே கண்ணிவெடிகள் (12 ஆம் பக்கம் பார்க்க)

## 13 ஆவது திருத்தச் சட்டம் ஈழக் கனவை நனவாக்கும்

### தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் சுட்டிக்காட்டு



(கொழும்பு)

13-வது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல் படுத்துமாறு அமைச்சர்களான ராஜித சேனாரத்னவும் டிலான் பெரேராவும் கோருவது தமிழீழக் கனவை நனவாக்கவே என தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் குணதாச அமரசேகர தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு வழங்கியுள்ள செவ்வியிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். இவ்வாறானவர்களுக்குச் சந்தர்ப்பம் வழங்கினால் போரை நிறுத்திச் சமாதானப் பேச்சுவார்த்தைக்கும் அழைப்பு விடுப்பார்கள் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த அமைச்சர்கள் (12 ஆம் பக்கம் பார்க்க)

## கம்பஹா மற்றும் கண்டியில் பத்தொன்பது தமிழர்கள் கைது

(கொழும்பு)

கம்பஹா மற்றும் கண்டி ஆகிய பிரதேசங்களில் பொலிஸாரும் இராணுவத்தினரும் இணைந்து நடாத்திய திடீர் சுற்றிவளைப்புத் தேடுதலின்போது 19 தமிழர்கள் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு முதல் நேற்று அதிகாலை வரையில் இந்தத் திடீர் சுற்றிவளைப்புத் தேடுதல் மேற்கொள்ளப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான ரஞ்சித் குணசேகர தெரிவித்தார்.

இது தொடர்பில் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தொடர்ந்தும் கூறியதாவது,

கம்பஹா (12 ஆம் பக்கம் பார்க்க)

## எரிபொருள் தட்டுப்பாட்டினால் உயிர் காக்கும் சேவை பாதிப்பு

### கிளி. வைத்தியசாலை வட்டாரங்கள் தகவல்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி வைத்தியசாலைகளுக்கான மின்சாரம் ஜெனரேட்டர் மூலமாகவே வழங்கப்பட்டு வந்தது. ஜெனரேட்டருக்குத் தேவையான எரிபொருள் கையிருப்பில் இல்லாத காரணத்தினால் சீரான மின் விநியோகம் இன்றி உயிர் காக்கும் அத்தியாவசிய சேவைகளைத் தொடர முடியாதிருப்பதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மின்சாரத்தின் உதவியோடும் சுவாச நிலையில் வைக்கப்பட்டுள்ள நோயாளிகள் இதனால் அபாயகரமான நிலைமைக்குத் தள்ளப்பட்டுள்ளதாகவும் கிளிநொச்சி மாவட்டத்தின் ஏனைய (12 ஆம் பக்கம் பார்க்க)

## ரணில் விக்கிரமசிங்கவே இலங்கையின் அடுத்த தலைவர்

### ரவி கருணாநாயக்க எம்.பி. தெரிவிப்பு

(கொழும்பு)

சார்க் மாநாடு என்ற பெயரில் மக்கள் பணம் வீணாகச் செலவிடப்பட்டுள்ளது. ரணில் விக்கிரமசிங்கவே இலங்கையின் அடுத்த தலைவர் என்பதால் சார்க்கில் எவ்வாறு பணம் செலவு செய்யப்படுவது என்பதை கண் காணிக்கவே அவர் சார்க் மாநாட்டுக்குச் சென்றிருந்தார். மக்கள் பணத்தில் நடத்தப்படும் விருந்துபசாரங்கள் எதிலும் அவர் கலந்து கொண்டிருக்கவில்லை என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.

உலக சந்தையில் எரிபொருள் விலை அதிகரிக்கும்போது (12 ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# அரசியல் வேலைத்திட்டத்தை வன்னிக்கும் விஸ்தரிக்கவுள்ளோம்

## கருணா அம்மான் தெரிவிப்பு

தமது கட்சியின் அரசியல் வேலைத் திட்டங்களை கொழும்புக்கும் வன்னிக்கும் விரிவுபடுத்தத் திட்டமிட்டுள்ளதாக தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் கருணா அம்மான் தெரிவித்துள்ளார்.

கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த பெரும்பாலான மக்கள் கொழும்பில் இருப்பதன் காரணமாக அங்கும் எமது அரசியல் வேலைத் திட்டங்களை முன்னெடுக்கத் தீர்மானித்துள்ளோம்.

அதேநேரம் எமது அரசியல் வேலைத்திட்டத்தை வன்னிக்கும் விஸ்தரிக்கவுள்ளோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் ஏனைய அரசியல் கட்சிகளுடன் தான் ஏற்கனவே நெருக்கமான உறவுகளைப் பேணி வருவதாகக் குறிப்பிட்டுள்ள அவர் புதிய நிர்வாக கட்டமைப்பின் கீழ் அதனைத் தொடர்ந்தும் முன்னெடுக்கவுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பில் நடைபெற்ற கட்சியின் கூட்டத்தில் அரசியல் ரீதியான சவால்களுக்கு முகங்கொடுக்கும் வகையில் கட்சியில் சில மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதன்போது, கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசத்துரை சந்திரகாந்தனை கட்சியின் தேசிய அமைப்பாளராக நியமிப்பதற்கு கட்சியின் அரசியல்பீடம் முடிவுசெய்துள்ளது.

அத்துடன் கிழக்கு மாகாணசபை உறுப்பினரான பிரதீப் மாஸ்டர் என்றழைக்கப்படும் எட்வின் கிருஷ்ணானந்தராஜா கட்சியின் செயலாளராகவும், ஜெயம் பொருளாளராகவும் நியமிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மாநகர மேயர் சிவகீதா பிரபாகரன், கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட அமைப்பாளராகவும், பாரதி அம்பாறை மாவட்ட அமைப்பாளராகவும், மார்க்கன் திருகோணமலை மாவட்ட அமைப்பாளராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

எதிர்வரும் வட மத்திய மாகாண சபைத் தேர்தலில் மங்களன் மாஸ்டர், ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் சார்பில் போட்டியிடுவதாகவும், அவர் பொலநறுவை மாவட்ட அமைப்பாளராக நியமிக்கப்படவுள்ளதாகவும் கருணா தெரிவித்துள்ளார்.

தமது கட்சியின் உறுப்பினர்கள், கிழக்கு மாகாண சபையின் செயற்பாடுகள் தொடர்பாக கடந்த சில மாதங்களாக மதிப்பீடுகளை மேற்கொண்டு வருவதாகக் குறிப்பிட்டுள்ள அவர் மாகாணத்தின் அபிவிருத்திக்காக அரசாங்கத்திடம் நிதியுதவியைக் கோருவதற்கு தீர்மானித்துள்ளதாகவும் தெரிவித்தார். (ச-5)

# விடுதலைப் புலிகளுக்குச் செல்லக்கூடும் என்ற அச்சத்தில் கமராவைப் பறித்தேன்

## மேர்வின் சில்வா விளக்கமளிப்பு

(கொழும்பு)

களனிப் பாலத் திறப்பு விழாவில் தாம் கலந்து கொள்ளும் காட்சிகள் அடங்கிய வீடியோக் காட்சிகள் தமிழீழ விடுதலைப் புலிகளின் கைகளில் சேரக்கூடிய அபாயத்தின் காரணமாகவே சிரச ஊடகவியலாளரின் கமாரவைப் பறித்ததாக தொழித்துறை அமைச்சர் மேர்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் தம்மீது தாக்குதல் மேற்கொள்ளக்கூடும் எனவும், கொலை அச்சுறுத்தல் இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சிரச தொலைக்காட்சி ஊடகவியலாளரைத் தாக்கிய சம்பவம் குறித்து மேர்வின் சில்வாவிடம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்ட சந்தர்ப்பத்தில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

பேலியகொட பொலிஸார் தொழிற்றுறை அமைச்சர் மேர்வின் சில்வாவிடம் நீண்ட வாக்கு மூலமொன்றைப் பெற்றுக் கொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நாரஹேன்பிட்டியில் அமைந்துள்ள அமைச்சர் மேர்வின் சில்வாவின் இல்லத்தில் இந்தவாக்கு மூலம் பதிவு செய்யப்பட்டதாகவும் சுமார் ஒரு மணித்தியாலத்திற்கு மேல் இந்த வாக்கு மூலம் பதிவு செய்யப்பட்டதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ரஞ்சித் குணசேகர தெரிவித்துள்ளார்.

சிரச தொலைக்காட்சி ஊடகவியலாளரைத் தாக்கவில்லை எனவும் தம்மை ஒளிப் பதிவு செய்த கசட்டை பெற்றுக் கொள்ள முயற்சித்தாகவும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை ஊடகவியலாளரைத் தாக்கிய சம்பவம் தொடர்பாக இதுவரையில் எவரும் கைது செய்யப்படவில்லை என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் தெரிவித்துள்ளார். (ச-5)

## நளினி வழக்கு விவகாரம்

# பதில் மனுவைத் தாக்கல் செய்யுமாறு தமிழக அரசுக்கு மேல் நீதிமன்றம் உத்தரவு

(சென்னை)

இந்தியீ முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டு ஆயுள் தண்டனை அனுபவித்துவரும் நளினி தன்னை விடுதலை செய்யுமாறு கோரி தாக்கல் செய்துள்ள வழக்கு மீதான பதில் மனுவை தாக்கல் செய்யுமாறு சென்னை மேல் நீதிமன்றம் தமிழக அரசுக்கு உத்தரவிட்டுள்ளது.

இந்த வழக்கை நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொண்டபோதே சென்னை மேல் நீதிமன்றம் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது.

நேற்று விசாரணையின்போது தமிழக அரசு சார்ப்பில் ஆஜரான சட்டத்தரணி பதில் மனு தாக்கல் செய்வதற்கு கால அவகாசம் வழங்கவேண்டுமென கோரிக்கை விடுத்தார்.

இந்தக்கோரிக்கையை ஏற்றுக் கொண்ட நீதிமன்றம், வழக்கு மீதான விசாரணையை எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தது.

அத்துடன் அன்றை தினம் தமிழக அரசை பதில் மனுவைத் தாக்கல் செய்யுமாறும் நீதிமன்றம் உத்தரவிட்டது.

இதேவேளை ராஜீவ் காந்தி கொலை வழக்கில் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட ரொபர்ட் பயாஸ் மற்றும் ஜெயக்குமார் ஆகிய இருவரும் தம்மை முன்கூட்டியே விடுதலை செய்யக்கோரி மனுத்தாக்கல் செய்துள்ளனர்.

இதனையடுத்து அந்த இரண்டு மனுக்களையும் நளினியின் வழக்குடன் இணைத்து விசாரிப்பதற்கு நீதிமன்றம் தீர்மானித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

# இன்னல்களுக்கு மத்தியில் அச்சத்துடன் பரீட்சை எழுதும் வன்னி மாணவர்கள்

## ஐ.நா.நிலையியற் குழு தகவல்

வன்னியில் கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைக்கு தோற்றுவதில் மாணவர்கள் பாரிய இன்னல்களுக்கு முகம்கொடுத்து வருகின்றனர்.

விமானக் குண்டுவீச்சுக்களும் ஷெல் தாக்குதல்களும் எந்த வேளையிலும் இடம் பெறலாம் என்ற சூழ்நிலையில் அச்சத்தின் மத்தியிலேயே மாணவர்கள் பரீட்சைக்குச் செல்கின்றனர் என ஐ.நா முகவர் நிறுவனங்களின் நிலையியற் குழு தெரிவித்துள்ளது.

கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் ஆகிய கட்டுப்பாடற்ற பிரதேசங்களில் ஏற்கனவே மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர். இந்த நிலையில் கடந்த 6 ஆம் திகதி பரீட்சை ஆரம்பமான பின்னர் இடம்பெற்ற ஷெல் தாக்குதல்களால் பரீட்சை நிலையங்களை இட மாற்ற வேண்டி ஏற்பட்டதாக வன்னித் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இது தொடர்பாக தகவல் வெளியிட்டுள்ள ஐ.நாவின் முகவர் நிறுவனங்களின் நிலையியற் குழு வன்னியில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள மன்னார், வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய பகுதிகளில் மக்கள் தொடர்ந்தும் இடம்பெயர்ந்து வருகின்றனர்.

இதனால் வன்னியில் மாணவர்கள் உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றுவதில் பாரிய சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர். இந்த நிலையில் அங்கு தொடரும் விமானக் குண்டு வீச்சுக்கள் மற்றும் ஷெல் தாக்குதல்களால் மாணவர்கள் அச்சத்தின் மத்தியிலேயே பரீட்சை எழுத வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

புதிதாக இடம்பெயரும் மக்கள் தற்காலிக தங்குமிடத்தையும் உணவையும் பெறுவதற்கே பாரிய பிரச்சினைகளை எதிர்நோக்கியுள்ளனர். இந்த நிலையில் மாணவர்களின் நிலை மிகவும் மோசமாகவுள்ளது. (ச-5)

## சிசுவின் சடலம் மீட்பு

யாழ்.நகரில் கன்னியர்மடம் வீதிக்கும், ஆச்சிரமம் வீதிக்கும் அண்மித்த பகுதியில் அமைந்திருக்கும் கழிவுநீர் மதகு ஒன்றின் கீழிலிருந்து அழுகிய நிலையில், பிறந்து ஒரு நாளேயான பெண் சிசுவொன்றின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

பழைய துணிகளால் சுற்றப்பட்டு, பொலித்தீன் பையொன்றில் போடப்பட்டு, அழுகிய நிலையில் இந்தச் சிசுவின் சடலம் நேற்று மீட்கப்பட்டுள்ளது.

துர்நாற்றம் வீசியதைத் தொடர்ந்து அப்பகுதி மக்கள், கிராமசேவகர் ஊடாகப் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டு, பொலிஸாரினால் சடலம் யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது

இதேவேளை கடந்த முதலாம் திகதி பன்றிக்கோட்டுப் பிள்ளையார் கோவில் பகுதியில் ஒரு நாளான சிசு ஒன்று மீட்கப்பட்டு யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

# மன்னார் மடு தேவாலயத்தில் நேற்று பிரதிஷ்டைச் சடங்கு

(மன்னார்)

மடு மாதாவின் திருச்சொரூபத்தைத் தூய்மைபடுத்தி பிரதிஷ்டை செய்யும் சடங்குகள் நேற்று காலை முதல் மன்னார் மடு தேவாலயத்தில் இடம்பெற்றதாக மன்னார் ஆயர் இல்லம் தெரிவித்துள்ளது.

மன்னார் ஆயர் இல்லத்தில் வைக்கப்பட்டிருந்த மடுமாதாவின் திருச் சொரூபம் சனிக்கிழமை மடு தேவாலயத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

இந்த நிலையில் நேற்று காலை 8.30 மணிக்கு தூய்மைப்படுத்தும் சடங்குகள் ஆரம்பமாகின.

மன்னார் மறை மாவட்டத்தைச் சேர்ந்த சுமார் 30 குருவானவர்கள் இந்த தூய்மைப் படுத்தும் சடங்கில் கலந்து கொண்டதாக மன்னார் ஆயர் இல்லத் தகவல்கள் தெரிவித்தன.

அத்துடன் நேற்று முதல் மடுத் தேவாலயத்தில் தினமும் காலையில் திருப்பலிப் பூஜைகளும் மாலையில் ஜெப மாலைகளும் வழமைபோல நடைபெறும் எனக் கூறினார்.

இதேவேளை ஓகஸ்ட் 15ஆம் திகதி நடைபெறும் வருடாந்த உற்சவம் இம்முறை நடைபெறாதெனவும் அன்றைய தினம் சிறப்புப் பூஜை யொன்று நடைபெறும் எனவும் ஆலய நிர்வாகம் தெரிவித்துள்ளது. (ச-5)

# உதைபந்தாட்டம்

(பருத்தித்துறை)

மாலிசந்தி மைக்கல் விளையாட்டுக் கழகத்தின் 15-வது ஆண்டு நிறைவு விழாவையொட்டி பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் அழைக்கப்பட்ட கழகங்களுக்கிடையேயான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு, அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து நவிண்டில் கலைமதி விளையாட்டுக் கழகமும்; பிற்பகல் 4.30 மணிக்கு சக்கோட்டை சென். சேவியர் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கரவெட்டி கலட்டி ஐக்கிய விளையாட்டுக் கழகமும் மோதுகின்றன. (ச-52)


## மணமகள் தேவை

இந்து வேளாளர், வெளிநாட்டில் வசிப்பவர், பிறந்த ஆண்டு 1975 நட்சத்திரம் ரேவதி-4, 8இல் செவ்வாய், கிரகபாவம் 31, M.B.B.S டாக்டருக்கு, B.Sc க்கு மேல் படித்த பட்டதாரி கார்த்திகை -02, ரோகிணி, புனர்பூசம், அத்தம், உத்தரம்-02, திருவோணம், உத்திரட்டாதி நட்சத்திரத்தில் பிறந்த பெண் தேவை.

*தொடர்புக்கு:-* மேரி திருமண சேவை
46, புதுவீதி, கொய்யாத்தோட்டம்,
யாழ்ப்பாணம். T.P:-0779116346 (1525)

## ஆனந்தி திருமண சேவை
## மணமகன் தேவை

ஆசிரியை, 1968இல் பிறந்த M.A.பட்டதாரி, அத்தம் நட்சத்திரம், கிரகபாவ சங்கியை 14 1/4, செவ்வாய் தோஷமற்ற காலசர்ப்ப தோஷங் கொண்டவருக்கு அரசுத்தொழில் புரிபவரை விரும்புகின்றோம். நேரடியாக, அஞ்சல் வழியாக, 021 222 8708 தொலைபேசி மூலம் தொடர்பு கொள்ளுங்கள், சீதனம் பேசித் தீர்வு காணலாம். V.A.சிவராசா, ஜோதிடர் ஆனந்தி திருமண சேவை 56, அம்மன் றோட், கந்தர்மடம், யாழ்ப்பாணம். சகல சமூகத்தவர்களுக்கும் திருமண சேவை விஸ்தரிக்கப்பட்டுள்ளது. பொருத்தமானவை தேடித் தரப்படும். (1530)

## அருள் முருகன் திருமணப் பணியகம்

இங்கிருக்கும் அதிகளவிலான தகுதிகள் மிக்க பல்துறைசார் மணமக்களுடன் இப்பொழுது வெளிநாடுகளில் PR/குடியியல் அந்தஸ்துடன் உயர்-கல்வி, பதவிகள், தரங்கள், நிலைகளிலுள்ள யாழ்.மாவட்ட மணமக்களது பெற்றோரும் வெளிமாவட்டங்கள் /வெளிநாடுகளில் இருந்து எம்து பணிகளை நாட ஆரம்பித்துள்ளனர். இங்குள்ள மணமக்களிலோ அடுத்தடுத்து வந்து கொண்டிருக்கும் மணமக்களிலோ நீங்கள் எதிர்பார்க்கும் மணமக்கள் இருப்பார்கள். தொடர்புகள் பெற்றோர், இல.3, யாழ்.வீதி, (பெருமாள் கோவில் முன்னெதிர் ரயில்பாதை வீதி), யாழ்ப்பாணம். அழைப்பு 222 9334 (ஆனைப்பந்தி சந்தியிலிருந்தும் சில நூறு மீற்றர் தூரத்தில்) (1529)

## தவறிவிட்டது

கோகிலா சண்முகவேல் ஆகிய எனது 807384368V இலக்கமுடைய தேசிய அடையாள அட்டை ஜோன் பொஸ்கோ வித்தியாலயத்திற்கும் கஸ்தூரியார் வீதிக்கும் இடையில் தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க் காணும் விலாசத்தில் ஒப்படைத்து உதவவும்.

185/1, கில்னர் லேன்,
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (C-1397)



அளவெட்டி, நாகேஸ்வரம்
ஸ்ரீ நாகவரத நாராயணர் தேவஸ்தானம்
## மஹோற்சவ விஞ்ஞாபனம்
15.08.2008 - 26.08.2008

மெய்யன்புடையீர்!

மேற்படி மஹோற்சவம் (15.08.2008) வெள்ளிக்கிழமை மு.ப. 10.30 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும். அன்பர்கள் அனைவரும் வந்து தரிசனை செய்து, நாகவரத நாராயணரின் திருவருளால் சுகவாழ்வு பெறுமாறு வேண்டுகின்றோம்.

### விசேஷ விழாக்கள்

| | | | |
|---|---|---|---|
| கொடியேற்றம் | 15.08.2008 | வெள்ளி | மு.ப.10.30 மணி |
| கைலாச வாகனம் | 22.08.2008 | வெள்ளி | பி.ப.06.00 மணி |
| சப்பறம் | 23.08.2008 | சனி | பி.ப.06.30 மணி |
| தேர் | 24.08.2008 | ஞாயிறு | மு.ப.11.00 மணி |
| உறியடி | 24.08.2008 | ஞாயிறு | பி.ப.06.30 மணி |
| ஸ்ரீரங்கநாதர் பாதபூஜை | 25.08.2008 | திங்கள் | மு.ப.09.00 மணி |
| தீர்த்தம் | 25.08.2008 | திங்கள் | மு.ப.11.00 மணி |
| ஆஞ்சநேயர், வைரவர் பொங்கல் | 26.08.2008 | செவ்வாய் | மு.ப.08.30மணி |
| திருக்கல்யாணம் | 26.08.2008 | செவ்வாய் | பி.ப.03.00 மணி |

நாகேஸ்வரம், அளவெட்டி — பொறுப்புரிமைப் பரிபாலனசபை.

# இன்று ஒரு தகவல்

## கல்வியில் கவனம்

படிக்கும் பிள்ளைகள் படிப்பதைத்தவிர எதிலும் கவனம் செலுத்தக் கூடாது. அப்பொழுதுதான் படிப்பு நன்றாக வரும். குரு குலத்திலெல்லாம் மாணாக்கர்கள் எப்படிப் படித்தார்கள் தெரியுமா? அதற்கு ஒரு உதாரணம் ஜனகர்.

யாக்ஞவல்கியரின் குருகுலத்தில் தான் ஜனக மகாராஜா படித்தார். நாம் தான் ராஜவாகி விட்டோமே... இனி மேல் நமக்கெதற்குப்படிப்பு என்று அவர் நினைக்க வில்லை. கல்விக்கு எல்லை ஏது?

யாக்ஞவல்கியர் தினமும் ஜனகர் வந்தபின் தான் பாடங்களை ஆரம்பிப்பார். இது சில மாணாக்கர்களுக்குப் பிடிக்கவில்லை. "ஜனகர் ஒரு மன்னன் என்ப தால் தானே இவ்வளவு மரியாதை கொடுக்கிறார்!" என்று மனதுக்குள் நினைத்தார்கள். இது குருவின் யோகசக்தியினால் அவருக்கு தெரிந்துவிட்டது.

குரு கவலைப்பட்டார். தன்னைப்பற்றி இப்படி நினைக்கிறார்களே என்பதற்காகவல்ல! அவர்களுடைய கல்வியின் பலனை இப்படிப்பட்ட சிந்தனைகள் மூலமாக இழந்து விடுவார்களே என்ற கவலைதான் அவருக்கு!

ஒருநாள் வகுப்பு நடந்து கொண்டிருக்கும் போது சிலர் ஓடிவந்து "ஐயா! எல்லா இடங்களும் திடீரென தீப்பற்றி எரிந்து கொண்டிருக்கிறது" என்றார்கள். இதைக்கேட்டதும் மாணவர்கள் துள்ளி எழுந்து குருவிடம் சொல்லாமலே வெளியே ஓடினார்கள்.

அடுத்ததாக இன்னும் சிலர் சத்தமிட்டுக்கொண்டே ஓடி வந்தார்கள். "அரசே! அரண்மனையிலும் நெருப்பு சூழ்ந்துவிட்டது. எல்லோரும் தெருவில் இறங்கி ஓடிக் கொண்டிருக்கிறார்கள்" என்றனர்.

எல்லோரும் பதறினார்கள். ஆனால் ஜனகர் மட்டும் கொஞ்சம் கூட சலனப்படாது குரு சொல்லிக் கொடுத்த பாடத்திலேயே மூழ்கியிருந்தார். முனிவர் ஜனகரைப் பார்த்து,

"உனது அரண்மனையிலும் தீப்பிடித்து கொண்டதாமே!" என்றாராம். அந்த வார்த்தைகள்கூட ஜனகரின் காதில் ஏறவில்லை. அந்தளவிற்கு பாடத்துடன் அவர் ஒன்றிப் போய்விட்டார் இது ஒரு உதாரணம்! இன்னொரு உதாரணம் சொல்கிறேன்.

குருகுலமொன்றில் ஒரு மாணவன் சாப்பிட்டுக் கொண்டிருந்தான். ஆசிரியரின் மனைவி அவனுக்கு சாப்பாடு பரிமாறினார். சோறு, கறியெல்லாம் வைத்தார். அடுத்ததாக நெய் ஊற்றுகிறேன் என்று சொல்லி ஊற்றினார். சாப்பிட ஆரம்பித்த மாணவன் முகம் ஒரு மாதிரியாகிவிட்டது.

"என்ன இது... நெய் ஊற்றுகிறேன் என்று சொல்லி விட்டு வேப்பெண்ணையை ஊற்றுகிறீர்களே ஏதாவது ஞாபகமறதியா?" என்று கேட்டான்.

அதற்கு ஆசிரியர் , "நீ எப்பொழுது வந்து சேர்ந்தாயோ அன்றிலிருந்து உனக்கு வேப்பெண்ணைதான் ஊற்றிக்கொண்டு வருகிறோம். உன் கவனம் முழுவதும் படிப்பில் இருந்ததனால் உனக்கு ருசி தெரியவில்லை. ஆனால் இன்று உன்கவனம் மாறிவிட்டது! உன்னுடைய நாக்கு ருசி தேட ஆரம்பித்துவிட்டது. இனிமேல் நீ இந்தக்குருகுலத்தில் இருக்க வேண்டாம் இதைவிட்டுப் போய் விடுவதுதான் நல்லது!" என்றாராம்.

கல்வியென்றால் எப்படி கவனமாக இருக்க வேண்டும் என்பதற்கு இதெல்லாம் உதராணங்கள். நீங்கள் உடனே என்னசார்... நெருப்புப் பிடித்துகொண்டால் கூட அதைக் கவனிக்காமல் விட்டு விட வேண்டுமா? வேப்பெண்ணையை நெய் என்று ஊற்றினால் கூட சாப்பிட வேண்டுமா? என்றெல்லாம் கேட்கக்கூடாது? கல்வியில் எந்த அளவுக்கு கவனம் இருக்கவேண்டும் என்பதை உணரத்தான் இந்த உதாரணங்கள் என்று எடுத்துக் கொள்ள வேண்டும்.

இந்தக் காலத்துப் பையன் ஒருவனிடம், "ஏனப்பா... நீ வீட்டில் உட்கார்ந்து படித்துக்கொண்டு இருக்கும் போது உங்கள் பள்ளிக்கூடம் தீப்பிடித்தால் நீ உடனே என்ன செய்வாய்? என்று கேட்டேன் "நானும் ஜனகர் மாதிரி எழும்பு ஓடி தீயை அணைக்க முயற்சி செய்ய மாட்டேன்!" என்றேன் "ஏன் அப்படி?" என்று கேட்க "பள்ளிக்கூடம் எரிந்தால் தானே சார் எங்களுக்கு லீவு கிடைக்கும்!" என்கிறான்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# வன்னி மக்கள் மீதான தாக்குதல்கள் குறித்து இந்தியாவின் மௌனம் கவலையளிக்கின்றது

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

(கொழும்பு)

வன்னிப் பகுதி மீது மேற்கொள்



ளப்படும் கண்மூடித்தனமான பல் குழல் பீரங்கித் தாக்குதல்கள் மற்றும் விமானக் குண்டுவீச்சு காரணமாக முல்லைத்தீவு உள்ளிட்ட வன்னிப் பிரதேசத்தில் பொதுமக்கள் கொல்லப்பட்டும் காயப்படுத்தப்பட்டும் வருவதோடு, இலட்சக்கணக்கானோர் தமது சொந்த இடங்களை விட்டு வெளியேறுவதற்கு நிர்ப் பந்திக்கப்பட்டுள்ளனர் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதி பாராளுமன்ற குழுத் தலைவர் மாவை சேனாதிராஜா விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

அரசாங்க வைத்தியசாலை, மாவட்ட செயலகம், முக்கியமான அரச அலுவலகங்கள் மற்றும் பொது மக்களின் குடியிருப்புகளை இலக்குவைத்து தாக்குதல் நடத்தப்படுவது குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மிகவும் அதிர்ச்சியடைந்துள்ளது.

கடந்த 9ஆம் திகதி அதிகாலையில் முல்லைத்தீவு, வைத்திய சாலை அரச அதிபரின் வாசஸ்தலம் மற்றும் முக்கிய அரச அலுவலகங்கள் அமைந்திருந்த பகுதிகள் மீது மேற்கொள்ளப்பட்ட ஆட்டிலறி பீரங்கித் தாக்குதல்களில் முல்லைத் தீவு அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் மற்றும் வைத்திய அத்தியட்சகர் மனைவி உள்ளிட்ட 18 பேர் காயமடைந்ததோடு, ஒன்றரை வயதுக் குழந்தை யொன்றும் உடல் சிதறி பலியாகியுள்ளது.

ஏற்கனவே முல்லைத்தீவுடனான சகல தொலைத் தொடர்பு வசதிகளும் துண்டிக்கப்பட்டுள்ளன. இந்த நிலை யில், அங்கு இடம் பெறும் சம்பவங்கள் குறித்த தகவல்கள் வெளிச்சத்திற்கு வருவதிலும் தாமதம் ஏற்பட்டுள்ளது. இராணுவ நடவடிக்கைகள் காரணமாக ஏற்கனவே அங்கு இரண்டு இலட்சத்திற்கும் அதிக மான மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர். உணவு, உடை, தங்குமிடம், மருத்துவ வசதியின்றி இம்மக்கள் பெரும் துயரத்தின் மத்தியில் உள்ளனர். அதே வேளை, இவ்வாறான தொரு சூழ்நிலைக்கு மத்தியில் மாணவர்களால் எவ்வாறு சிறந்த முறையில் க.பொ.த.உயர்தர பரீட்சைக்குத் தோற்ற முடியும். இந்தக் காரணங்களாலேயே வறிய அப்பாவி பொது மக்களை மேலும் வறிய நிலைக்கு உடைமைகளை இழக்கும் நிலைக்கு இட்டுச் செல்லும் இந்த இராணுவ நடவடிக்கையை நாம் கண்டிக்கின்றோம்.

சர்வதேச சமூகம் ஐ.நா.வும் மனித அவலங்கள் ஏற்படுவதைத் தடுத்து இராணுவ நடவடிக்கையை நிறுத்துவதற்கு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ் வேளையில் இந்தியா கடைப்பிடித்து வரும் மௌனம் எமக்கு மிகவும் கவலையை ஏற்படுத்தியுள்ளது.

இடம்பெயர்ந்த மக்களுக்குத் தேவையான உணவு, மருத்துவ வசதிகள், மனிதாபிமானத் தேவைகளைப் பூர்த்தி செய்யப்படுவதை சர்வதேச மனிதாபிமான அமைப்புக்கள் உறுதிப்படுத்த வேண்டும் என்றார்.(அ-6)

# ஜனவரி முதல் கடத்தப்பட்ட 204பேரில் 120பேர் பற்றிய தகவல் எதுவுமில்லை

## பிரதியமைச்சர் இராதாகிருஷ்ணன் தகவல்

(கொழும்பு)

ஜனவரி மாதம் முதல் இதுவரை 204 பேர் கடத்தப்பட்டுள்ளதாகவும் இவர்களில் 61பேர் சித்திரவதையின் பின்னர் விடுவிக்கப்பட்டுள்ளதுடன் 22பேர் தடுத்து வைக்கப்பட்டுள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகவும் பிரதி அமைச்சர் பெ.இராதாகிருஷ்ணன் தகவல் வெளியிட்டுள்ளார்.

இது குறித்து மலையக மக்கள் முன்னணியின் மக்கள் பணியகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியை பிறப்பிட மாகவும் வத்தளையை வசிப்பிடமாகக்கொண்டு தொழில் புரிந்த வாலிபரை காணவில்லை என்று மலையக மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினரும் வாழ்க்கைத் தொழில், தொழில் நுட்ப பயிற்சி பிரதி அமைச்சருமான பெ.இராதாகிருஷ்ணனிடம் சகோதரன் புகார் செய்துள்ளார்.

பத்மநாதன் றொபின்ரோய் (வயது 27) என்ற வாலிபரே கடந்த 08.05.2008 முதல் காணாமல் போயுள்ளதாக சகோதரரான பத்மநாதன் ஜோன்சன் புகார் செய்துள்ளார்.

வத்தளையிலுள்ள இரும்புக் கடை ஒன்றில் தொழில் புரிந்து வந்த இவர் சம்பவதினம் யாழ்ப்பாணம் செல்வதாக கூறி திருகோணமலைக்குச் சென்றதாகவும், அங்கிருந்து கப்பலில் செல்வதற்கு ஏற்பாடாகியிருந்த போதும் அவர் யாழ். நகரை வந்தடையவில்லை என்று பெற்றோர் தெரிவித்ததையடுத்து அவர் தொடர்பாக யாழ்.பொலிஸ் நிலையத்தில் புகார் செய்துள்ளதாக பத்மநாதன் ஜோன்சன் மேலும் தெரிவித்தார்.

கடந்த மூன்று வருடங்களாக வத்தளையில் வசித்து வந்த றொபின்ரோய் எதுவிதமான தவறான தொடர்புகளற்றவர் என்றும் சாதாரண கூலித் தொழிலாளியாகவே இவர் வத்தளையில் வசித்து வந்ததாகவும் மேலும் தெரிவித்த சகோதரர் இவரை கண்டுபிடித்து தருமாறு பிரதி அமைச்சரிடம் வேண்டுகோள் விடுத்தையடுத்து பிரதி அமைச்சர் உயர்மட்ட பொலிஸ் அதிகாரிகளுக்கும் திருமலை, யாழ்.நகர் பொலிஸ் நிலையங்களுக்கும் அறிவித்துள்ளார்.

இதற்கிடையில் தெஹிவளையில் வசித்து வந்த நயினாதீவு வாலிபரான ஆர்.இளமாறனை காணவில்லை என்று அவரது சகோதரனான ஆர்.தமிழ்மாறனும், அன்பு வழிபுரம் திருகோணமலையைச் சேர்ந்த 25வயதுடைய நாகேந்திரன் பிரதீபன் என்ற தனது மகனை காணவில்லை என்று தாயாரான ஜெயலக்சுமி நாகேந்திரனும் பிரதி அமைச்சரை நேரில் சந்தித்து புகார் செய்துள்ளனர்.

அத்துடன் கடந்த மாதம் 25 ஆம் திகதி விவேகாந்தா மேட்டிலுள்ள லொட்ஜிலிருந்து கறுப்பு நிறக்காரில் கடத்தப்பட்ட செல்லக்கண்டு யயோதர் (29) விடுக்கப்பட்டுள்ளதாகவும், வெள்ளவத்தையில் வைத்து வெள்ளைவானில் கடத்தப்பட்ட ஜெகநாதன் தினேஷ் வவுனியாவில் விடுவிக்கப்பட்டதாகவும் உறவினர்கள் பிரதி அமைச்சரிடம் தெரிவித்துள்ளனர்.

ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் இதுவரை 204பேர் கடத்தப்பட்டுள்ளதாக பிரதி அமைச்சரிடமும். காணாமல் போதல் மற்றும் ஆட்கடத்தில் தொடர்பான விசாரணைகளை மேற்பார்வை செய்யும் குழுவிடமும் புகார் செய்யப்பட்டுள்ளது.

இவர்களில் 22பேர் இரகசிய பொலிஸ், பயங்கரவாத தடுப்புப் பிரிவு மற்றும் பூசா முகாம்களில் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

வவுனியாவில் ஒருவர் கொல்லப்பட்டுள்ளதோடு 61பேர் கடத்தப்பட்டவர்களால் தாக்குதல்களுக்குள்ளாகி இம்சிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டுள்ளனர். மிகுதியான 120 பேர் தொடர்பாக இதுவரை தகவல் எதையும் பெற முடியவில்லை என்று பிரதி அமைச்சர் தெரிவித்தார். (ஓ-6)

## இராசி பலன்

12.08.2008
(ஆடி 28, செவ்வாய்கிழமை)
கேட்டை காலை 6.48 மணிவரை
ஏகாதசி முன்னிரவு 10.35 மணிவரை
இராகுகாலம்-3.05-4.35 மணிவரை
சுபநேரம்-10.35-12.05மணிவரை
ஏகாதசி விரதம்

| | |
|---|---|
| மேடம் | உடல் உழைப்பு, பிரயாணம், பெரியோர் சந்திப்பு, முயற்சி தாமதம். |
| இடபம் | வாகனப்பயம், எதிரிகள் தொல்லை, காரிய தாமதம், போசனசுகம். |
| மிதுனம் | குடும்ப மகிழ்ச்சி, அபூர்வ சந்திப்பு, காரிய அனுகூலம, போசன சுகம். |
| கடகம் | சுகவாழ்வு, சுவாரஸ்யம், முயற்சி கைகூடும், திடீர் பயணம். |
| சிங்கம் | வியாபார நன்மை, காரிய இடையூறு, ஆரோக்கியக்குறைவு, மனச்சஞ்சலம். |
| கன்னி | கல்வியில் ஆர்வம், தனவிரயம், முயற்சி தாமதம், திடீர் நன்மை. |
| துலாம் | சகோதரர் வழி நன்மை, காரிய அனுகூலம், பொருள் சேர்க்கை, போசன சுகம். |
| விருச்சிகம் | மரியாதைக்குறைவு, முயற்சி தாமதம், அதிகசெலவு, உடல் நலக்குறைவு. |
| தனுசு | ஆழ்ந்த சிந்தை, சயனசுகம், நண்பர்கள் உதவி, நல்ல முயற்சி. |
| மகரம் | அலைச்சல், சுபசெலவு, தொழில் நன்மை, முயற்சி தாமதம். |
| கும்பம் | எடுத்தகாரியம் கைகூடும், பொருள் சேர்க்கை, பாராட்டு, மனமகிழ்ச்சி. |
| மீனம் | நல்லசெய்தி, அதிக பிரயாசை, அதிகாரம், நண்பர்கள் உதவி. |

வளவன்

## அலங்காரத் திருவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வண்ணை பிறவுண்வீதி அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளி அம்மன் ஆலய அலங்காரத் திருவிழா ( சாந்திக மஹோற்சவம்) 11 ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

திருவிழாவில் 20ஆம் திகதி புதன்கிழமை சப்பறத் திருவிழாவும் , 21ஆம்திகதி வியாழக்கிழமை காலை தேர்த்திருவிழாவும், 22 ஆம் திகதி வெள்ளிக்கிழமை கும்பாபிஷேக தினவிழா (மணவாளக் கோலம்) சங்காபிஷேகம் ஆகியன இடம்பெற்று 23 ஆம் திகதி சனிக்கிழமை வைரவர் சாந்தியுடன் நிறைவுபெறவுள்ளது. (ஓ)

## ஸ்கந்தவரோதயக் கல்லூரி அதிபர் பதவி வெற்றிடம்

(யாழ்ப்பாணம்)

ஸ்கந்தவரோதயக் கல்லூரி/ஏபி பாடசாலை அதிபர் பதவி வெற்றிடமாகவுள்ளது. யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள ஐந்து கல்வி வலயங்களிலும் கடமையாற்றும் இலங்கை அதிபர் சேவையைச் சேர்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

57 வயதிற்குக் குறைந்த இலங்கை அதிபர் சேவையைச் சேர்ந்தவர்கள் தங்கள் சுயவிபரங்கள் கொண்ட விண்ணப்பத்தினை தயாரித்து மேலதிக மாகாணக்கல்விப் பணிப்பாளருக்கு 20 ஆம்திகதிக்கு முன்பு அனுப்பி வைக்கும்படி யாழ்.மாவட்ட மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர் வே.தி.செல்வரத்தினம் கேட்டுக்கொள்கின்றார். (ஓ)

## மஹோற்சவம்

(வட்டுக்கோட்டை)

வட்டு கிழக்கு துறட்டிப்பளை அம்பாள் தேவஸ்தானத்தில் நடைபெற்று வரும் மஹோற்சவத்தில் இன்று செவ்வாய்க் கிழமை நண்பகல் 12 மணிக்கு வசந்தமண்டபப் பூசை இடம்பெற்று 1 மணியளவில் வேட்டையாடுவதற்காக அம்பாள் சங்கரத்தை பத்திரகாளி அம்மன் கோவிலை நோக்கிப் புறப்பட்டு அங்கு வேட்டையாடிவிட்டு மாவடிச்சந்தியூடாக சித்தன்கேணி பிள்ளையார் கோவில் ஊடாக ஆலயத்தை அடைவார்.


14 ஆம் திகதி வியாழக்கிழமை மாலை 4.30 மணிக்கு சப்பறத்திருவிழாவும்,15 ஆம் திகதி வெள்ளி முற்பகல் 10 மணிக்கு இரதோற்சவமும் 16 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்கு தீர்த்தோற்சவமும் மாலை 4 மணிக்கு கொடி யிறக்கமும் நடைபெறும். (ஓ)


## சமயச்சொற்பொழிவும் கூட்டுப் பிரார்த்தனையும்

(நல்லூர்)

நல்லூர் உற்சவ காலத்தை முன்னிட்டு நாவலர் மணிமண்டபத்தில் நடைபெற்று வரும் ஆன்மீக நிகழ்வுகளில் நாளை புதன்கிழமை மாலை 3 மணிக்கு 'இந்து சமய இறைமைகள்' எனும் பொருளில் காரை எம்.பி.அருளானந்தன் சொற்பொழிவாற்றவுள்ளார்.

தொடர்ந்து சீரணி நாகபூஷணி அம்பாள் அறநெறிப் பாடசாலை, நல்லூர் சிவசாயி சித்தரகோட்ட அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கூட்டுப்பிரார்த்தனை நிகழ்வும் இடம்பெறவுள்ளது. (ஓ)





அராலி மத்தி ஸ்ரீவிசாலாட்சி விஸ்வேஸ்வரர் (சிவன்கோவில்)தேவஸ்தான ஆடிப்பூர திருவிழாவில் சுவாமிக்கு பஞ்சாராத்தி காட்டப்படுதையும், இணுவில் உதயன் குழுவினரின் மங்கள வாத்தியத்துடன் சுவாமி இடப வாகனத்தில் வெளிவீதி உலாவருவதையும் படங்களில் காணலாம். (படங்கள்:குரு)

## அதிபர் ஆசிரியர்களால் எதிர்நோக்கப்படும் பிரச்சினைகள் தொடர்பான கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

ஆசிரிய நிர்வாக விடயங்கள், நிதிப் பிரமாணங்கள் தொடர்பான விளக்கமும் மற்றும் அவை தொடர்பாக அதிபர், ஆசிரியர்களால் எதிர்நோக்கப்படும் பிரச்சினைகள் தொடர்பாகவும் ஆராய்வதற்கான கலந்துரையாடல் ஒன்று இன்று செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிமுதல் கொக்குவில் இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இக் கலந்துரையாடலில் கீழ்வரும் பாடசாலைகளில் கடமையாற்றும் அனைத்து அதிபர்,ஆசிரியர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் கேட்டுக் கொண்டுள்ளார்.

ஏற்கனவே 13ஆம்,15ஆம் திகதிகளில் வண்ணை நாவலர் மகா வித்தியாலயத்தில் நடைபெறவிருந்த கலந்துரையாடல் தவிர்க்க முடியாத காரணத்தால் இரத்துச் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

- கொக்குவில் இந்துக்கல்லூரி
- கொக்குவில் ஸ்ரீஇராமகிருஷ்ண வித்தி.
- கொக்குவில் கிழக்கு நாமகள் வித்தி.
- கொக்குவில் ஸ்ரீஞானபண்டித வித்தி.
- கோண்டாவில் இந்து ம.வித்தி.
- கோண்டாவில் இராமகிருஷ்ண வித்தி.
- கொக்குவில் ஸ்தான சி.சி.த.க. பாடசாலை.
- கொக்குவில் மேற்கு C.C.T.M.S
- கோண்டாவில் C.C.T.M.S
- கோண்டாவில் பரஞ்சோதி வித்தி.
- கோண்டாவில் R.C.T.M.S.
- கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை.
- நல்லூர் ஞானோதயா வித்தி.
- நல்லூர் காசிப்பிள்ளை வித்தி. (அ)

## ஆடிச்செவ்வாய் நிறைவு உற்சவம்

தெல்லிப்பளை துர்க்காதேவி தேவஸ்தானத்தில் ஆடிச்செவ்வாய் நிறைவு உற்சவம் இன்று நடைபெறவுள்ளது.

பல பகுதிகளிலுமிருந்து அடியவர்கள் பங்குகொள்வதால் சகல ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதற்காக விசேட போக்குவரத்து சேவைகளும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாகவும் அடியவர்களுக்கு நண்பகல் துர்க்காதேவி அன்னசத்திரத்தில் அன்னதானம் வழங்கப்படும் எனவும் ஆலய பரிபாலனசபைத் தலைவர் செஞ் சொற்செல்வர் ஆறுதிருமுருகன் தெரிவித்துள்ளார். (அ)

## ஏகாதசி உற்சவம்

கோண்டாவில் கிழக்கு அருள்மிகு ஸ்ரீ வல்லிபுர நாதர் தேவஸ்தானத்தில் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.30மணிக்கு ஏகாதசி பூஜைகள் சங்கல்பத்துடன் ஆரம்பமாகி அபிசேக . ஆராதனைகளை அடுத்து ஸ்ரீதேவி , பூதேவி சமேதராக நாராயணன் உள் வீதிவலம் வரும் திருக்கோலக் காட்சியும் இடம் பெறும். (ஓ-36)

◆◆◆

அளவெட்டி தெற்கு நாகேஸ்வரம் ஸ்ரீ நாகவரத நாராயணர் தேவஸ்தானத்தில் இன்று காலை 9 மணிக்கு ஏகாதசி விரத பூஜை இடம்பெறவுள்ளது. தொடர்ந்து ஏகாதசி




## எழுவைத்வு முருகவேள் வித்தியாலய கனடாக் கிளை அங்குரார்ப்பணம்

(ஊர்காவற்றுறை)

எழுவை தீவு முருகவேள் வித்தியாலய கரம்பொன் பழைய மாணவர்களும் கனடாவிலுள்ள பாடசாலை அபிவிருத்திக் குழுவும் எழுவைதீவு பிரதேச மக்களும் இணைந்து அண்மையில் எழுவைதீவு முருகவேள் வித்தியாலய பாடசாலை அபிவிருத்திக் குழு கனடா கிளை அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுள்ளது.

இதன் முதற் செயற்பாடாக மின் னியல் உபகரணங்கள் மற்றும் கற்பித்தல் உபகரணங்கள் வழங்கப்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. (அ)

## வரலட்சுமி பூஜை

(யாழ்பபாணம்)

எதிர்வரும் வெள்ளிக்கிழமை மாலை 3 மணிக்கு வரலட்சுமி விரதத்தை முன்னிட்டு கொக்குவில் நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் 'ஆலயத்தில் வரலட்சுமி பூஜைகள் நடைபெறும். அதனைத் தொடர்ந்து அடியார்களுக்கு வரலட்சுமி விரத காப்பு வழங்கப்படும். (ஓ)

## 5ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சை அறிவுறுத்தற் கூட்டம்

வலிகாமம் வலயக் கல்வி அலுவலகம், கோப்பாய் கோட்டக் கல்வி அலுவலகங்களையும் கொண்ட யாழ்ப்பாணம் வலயம் II இற்கு உட்பட்ட 5ஆம் தரப் புலமைப் பரிசில் பரீட்சை ஆளணியினருக்கான அறிவுறுத் தற் கூட்டம் எதிர்வரும் 15 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு இராமநாதன் கல்லூரியில் நடை பெறும்.

மேற்படி பரீட்சைக்காக நியமிக்கப்பட்ட இணைப்பு அலுவலர்கள், உதவி இணைப்பு அலுவலர்கள், பரீட்சை மேற்பார்வையாளர்கள், உதவிப் பரீட்சை மேற்பார்வையாளர்கள் தவறாது சமுகமளிக்கும்படி வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் கேட்டுக்கொள்கின்றார். (ஓ)

## தாச்சிச் சுற்றுப்போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் இலங்கை வங்கி மற்றும் வர்த்தக வங்கியின் ஆதரவுடன் யாழ்.மாவட்ட தாச்சி விளையாட்டுச் சங்கம் நடாத்தும் 13 ஆவது தாச்சிச் சுற்றுப் போட்டியில், நாளை புதன்கிழமை மாலை 4.30 மணிக்கு சுதுமலை நாவலர் விளையாட்டுக் கழகம் எதிர் மயிலிட்டி நியூகிற் விளை யாட்டுக்கழகமும்,

நாளை மறுநாள் வியாழக்கிழமை மாலை 4.30 மணிக்கு சுது மலை யுவசக்தி விளை யாட்டுக்கழகம் எதிர் உடுவில் உதயசூரியன் விளையாட்டுக் கழகமும், 15 ஆம்திகதி வெள்ளிக்கிழமை மாலை 4.30 மணிக்கு மயிலிட்டி ஒற்றுமை விளையாட்டுக்கழகம் எதிர் மயிலிட்டி இளைஞர் ஒன்றியம் விளையாட்டுக் கழகமும் விளையாட உள்ளன. (ஓ)

## சடலங்களைப் பொறுப்பேற்க கோரிக்கை

கொடிகாமம் பொலிஸாரினால் நேற்று யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்ட பெண்கள் இருவரின் சடலங்களானது யாழ்.போதனா வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்ககப்பட்டுள்ளது.

உரித்துடையோர் 05 நாட்களுக்குள் இச் சடலங்களை அடையாளம் கண்டு பொறுப்பேற்கும் படி யாழ்.போதனா வைத்தியசாலையின் பணிப்பாளரினால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். (அ)

## இலங்கை தொழில்நுட்ப சேவையின் வன பரிபாலன அலுவலர் பதவி

இலங்கை தொழில்நுட்ப சேவையின் வன பரிபாலன அலுவலர் பதவிக்கு போட்டிப் பரீட்சை மூலம் ஆட்சேர்ப்பு செய்வதற்கு வன பரிபாலன திணைக்களம் 25.07.2008 திகதிய வர்த்தமானி பத்திரிகை மூலம் விளம்பரப்படுத்தியுள்ளது.

இப் பரீட்சைக்கு தோற்ற விரும்புபவர்கள் பரீட்சைக் கட்டணம் ரூபா 300/- இனைத் தங்களது பிரதேச செயலர் பிரிவுகளில் செலுத்தி பற்றுச்சீட்டினை பெற்றுக்கொள்ள முடியும் என யாழ்.அரச அதிபர் அறிவித்துள்ளார். இதற்கான விண்ணப்ப முடிவுத் திகதி 31.08.2008என்பது குறிப்பிடத்தக்கது. (ஓ)






ILO நிறுவனமும் பனை அபிவிருத்திச் சபையும் இணைந்து நடாத்திய பனை வள கைப்பணிக் கண்காட்சி அண்மையில் கட்டப்பிராய் சனசமூக நிலையத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வலிகிழக்கு பிரதேச செயலர் சி.ஏ.மோகன்றாஸ் அழைத்துவரப்படுவதையும், சரஸ்வதி சனசமூக நிலையச் செயலாளர் த.ஜெயசீலன் உரையாற்றுவதையும் படங்களில் காணலாம்.

# நோத் முதல் கோபல்லவா வரை 65


ஜேம்ஸ் டி.அல்விஸ்

பிரித்தானிய அரசாங்கத்துக்குச் சொந்தமான குடியேற்ற நாடுகள் -கொலனிகள் உலகம் எங்கும் பரந்து பரவியுள்ளன. ஆனால் அவற்றில் எங்காயினும் என்றாயினும் விதிக்கப்படாத இராணுவச் செலவு இலங்கையில் மாத்திரமே விதிக்கப்படலாயிற்று. அதன் மர்மம் ஒருவருக்குமே விளங்கவில்லை. அன்றி குடியேற்ற மந்திரியார் இலங்கைச் சட்டசபைக்குப் பணம் செலவழிக்கும் அதிகாரத்தில் தலையிட உரிமை இல்லை என்றும் அரசாங்கம் தன் விருப்பத்தின் படி செலவிடலாம் என்றும் அறிக்கை விட்டார்.

யோச்வால் அவர்கள் செய்த மகத்தான சேவையைப் பாராட்டி எழுதினால் அது விரிந்து ஒரு நூலாய்விடும். அக்காலத்தில் அதிவீரனாய ஆள்பதி றொபின்சனும் இராணி அப்புக்காத்தாய் இருந்து பிரதம நீதிபதியாய் உயர்ந்த பதவியை வகித்த மகா மேதை யாகிய றிச்சாட் மோகனும் செயல் வீரனாய கிப்சனும் அரசாங்கத்தின் தூண்களாய் இருந்தார்கள். அவர்களை எதிர்க்கும் ஆற்றல் எவருக்கும் இருக்கவில்லை. அவர்களுக்கு உத்தியோக அங்கத்தவர் பக்கபலமாய் இருந்தனர். யோச்வால் அவர்கள் ஸ்பெக்குலம் என்னும் புனைபெயரில் அரசாங்கத்தின் போக்கை வெகுவாகக் கண்டித்து ஆணித்தரமாக ஒப்சேவர் பத்திரிகையில் எழுதிவந்தார். அவர் சட்டசபையில் திருத்தங்கோரி எழுதிய எழுத்தோவியங்கள் எண்ணிறைந்தவை. அவர் கோரிக்கைகளை மறுத்து அரசாங்கத்தின் சார்பில் கண்டி ஹெறல்ட் என்ற பத்திரிகை செய்திகளை வெளியிட்டது.

## மீள் பார்வை

யோச்வால் அவர்கள் 1856 ஆம் ஆண்டு முதலாகச் சட்டசபையில் ஐரோப்பியர் பிரதிநிதியாக இருந்தார். அவரை ஒன்பது முறை திரும்பத் திரும்பத் தெரிவு செய்தார்கள். அவர் இலங்கையில் தோட்டத்துறையை ஆரம்பித்தவர்களுள் ஒருவர் என்பதும், தோட்டத் துரைமார் சங்கத்தை ஆரம்பித்தவர் என்பதும் அதன் தலைவராய் பலகாலம் இருந்தவர் என்பதும் அவருக்குப் பெருமை அளிப்பன. அவர் பெரிய புலவராயிருந்து பலருக்குப் பலவித உதவிகள் செய்தமையோடு யேம்ஸ் டி அல்விஸ், சாள்ஸ் அம்புறோஸ் லோறன்ஸ் ஆகிய இருவருடன் சேர்ந்து இலங்கை அரசியற்றிருத்தத்துக்காகவும் அரும்பாடுபட்டுள்ளார்.

ஆள்பதி றொபின்சன் பதவியேற்பதற்கிடையில் பதில் ஆள்பதியாக ஓபிறையன் கடமையாற்றினார். அக்காலத்தில் 17.08.64 இல் சட்டசபையின் வைகல் ஆரம்பமான வேளையில் ஓபிறையின் தமது அரியணைப் பேச்சை முடித்துவிட்டு இராணி மாளிகைக்குச் சென்று சட்டசபையினரின் நன்றிப் பிரேரணையை ஏற்பதற்காக அங்கே இருந்தார்.

அக்காலச் சம்பிரதாயப்படி நன்றிப் பிரேரணை சட்டசபை அங்கத்தவரால் பிரேரிக்கப்பட்டு பத்துப் பதினைந்து நிமிட நேரத்தில் ஆள்பதிக்கு அனுப்பப்படுவது வழக்கம். ஆனால் அன்றைய கூட்டத்திலே உத்தியோகப்பற்றற்ற பிரதி நிதிகள் ஆறுபேரும் தவறாது சமுகமளித்தனர். உத்தியோக அங்கத்தவர் வரிசை யிலே ஐவர் மாத்திரமே சமுகமாயிருந்தனர். உத்தியோகப் பற்றற்றவர் வரிசையிலே சியேட்ராய் இருந்த ஐரோப்பியர் பிரதிநிதியாய யோச்வால் அவர்கள் ஆள்பதியவர்களுடைய அரியணைப் பேச்சின் நன்றிப் பிரேரணையில் திருத்தப் பிரேரணைகள் கொண்டுவர முனைந்தார். அவருடைய முதலாவது பிரேரணை பின் வருமாறிருந்தது.


சி.ஏ.லோறன்ஸ்

*சட்டசபையின் முந்திய வைகலின்போது சபை அங்கத்தினர் முக்கியமாகக் கருதிய படைச் செலவைப் பற்றிய விபரங்கள் அரியணைப் பேச்சில் குறிக்கப்படாமையை இச்சபை குறை எனக் கருதுகின்றது.*



இப்பிரேரணை முறையற்றது என எதிர் விதிக்கப்பட்டு நீக்கப்பட்டது. அதற்குத் தலைவர் கூறிய காரணம், திருத்தப் பிரேரணைகள் ஆள்பதி அவர்களின் அரியணைப் பேச்சில் குறிப்பிடப்பட்டவை சம்பந்தமாக இருக்க வேண்டுமேயல்லாமல் குறிக்கப்படாதவை சம்பந்தமாய் இருக்கப்படாதென்பதேயாம். முதற்பிரேரணை எதிர்நீக்கப்பட்டதும் யோச்வால் தமது இரண்டாவது பிரேரணையை பிரேரித்தார்.

க.சி.குலரத்தினம்

*இலங்கை வளநாட்டின் நிலையான விளைபொருள்கள் என்றென்றும் உலகச் சந்தைகளில் மதிப்புக்குரிய பண்டங்களாய் இருந்தமையால் ஏற்பட்ட பெருக்கமேயன்றி, இன்றைய அரசாங்கம் எடுத்துக் கொண்ட முயற்சியால் ஆனதல்ல என்பதை இச்சபை நன்றியுடன் கருதுகின்றது.* (தொடரும்)




வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி உயர்வகுப்பு மாணவ மன்றத்தின் வருடாந்த ஒன்றுகூடல் நிகழ்வில் பிரதம விருந்தினரான கல்லூரியின் பழைய மாணவியும் இளைப்பாறிய சங்கீத ஆசிரியையுமான செல்வி பேரின்பநாயகி சிவகுரு மாணவிகளால் மலர்ச்செண்டு வழங்கி வரவேற்கப்படுவதையும், பிரதம விருந்தினர் மங்கல விளக்கேற்றி நிகழ்வை ஆரம்பிப்பதையும், அதிபர் திருமதி வி.சுகுமாரன், மாணவ மன்றத் தலைவி ஆகியோரையும் படங்களில் காணலாம். (படங்கள்:-பருத்தித்துறை நிருபர்)



கந்தர்மடம் உதயநாகபூஷணி அம்மன் ஆலய ஆடிப்பூர பெருவிழாவில் காரை எம்.பி. அருளானந்தன் தெய்வீக இசையரங்கு நிகழ்வை தொகுத்து வழங்குவதையும், செல்வி. சி.சிவதர்சிகா பாடுவதையும் மற்றும் அணிசெய் கலைஞர்களையும் படத்தில் காணலாம். (படம்:-இருபாலை நிருபர்)

# கோப்பாய்ப் பிரதேசத்தின் 1 இன்றைய கல்விநிலை



கோப்பாய்ப் பிரதேசம் எனச் சுட்டப்படும் வலிகாமம் கிழக்கு பிரதேச செயலகப் பிரிவானது யாழ்ப்பாண மாவட்டத்தின் பிரதேசசெயலக/உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள் பதினைந்தினுள் ஒன்றாகும். மொத்த நிலப்பரப்பாக (நீர்ப்பரப்பைத் தவிர்த்து) 983.6 சதுர கிலோமீற்றரைக் கொண்ட யாழ்ப்பாண மாவட்டத்தில் வலிகாமம் கிழக்குப் பிரதேசம் 101.1 சதுர கிலோமீற்றர் பரப்பைக் கொண்டது. இது யாழ். மாவட்டத்தின் முழுநிலப் பரப்பில் 10.3 சதவீதமானதாகும்.

435 கிராம அலுவலர் பிரிவுகளைக் கொண்ட யாழ்.மாவட்டத்தில் 31 கிராம அலுவலர் பிரிவுகள் வலிகாமம் கிழக்குப் பிரதேச செயலகப் பிரிவினுள் அடங்குவன. பொது நிர்வாக வசதிக்காக பிரதேச செயலக/உதவி அரச அதிபர் பிரிவுகள் என்பவற்றோடு பிரதேச சபைகளும் அமைந்திருந்தாலும், கல்வி நிர்வாகமானது கல்வி வலயங்களாலும் கல்விக் கோட்டங்களாலும் மேற்கொள்ளப்படுகின்றது.

யாழ்ப்பாண மாவட்டத்தின் பாடசாலைகளின் கல்வி நிர்வாகம் ஐந்து கல்வி வலயங்களிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன. யாழ்ப்பாணம், தீவகம், தென்மராட்சி, வலிகாமம், வடமராட்சி ஆகிய இந்த ஐந்து கல்வி வலயங்களுள், யாழ்ப்பாணக் கல்வி வலயமானது யாழ்ப்பாணம், நல்லூர், கோப்பாய் எனும் மூன்று கல்விக் கோட்டங்களாக வகுக்கப்பட்டுள்ளது. கோப்பாய் கல்விக் கோட்டம் வலிகாமம் கிழக்குப் பிரதேச செயலகப் பிரிவை முற்றாக உள்ளடக்குவதாகும். இக் கல்விக் கோட்டத்தில் தற்போது இயங்கும் 37 பாடசாலைகள் பின்வருமாறு வகைப் படுத்தப்பட்டுள்ளன.

அட்டவணை I

*கோப்பாய் கோட்டப் பாடசாலைகளின் வகைககள்*

| பாடசாலை வகை | எண்ணிக்கை |
|---|---|
| I AB | 4 |
| I C | 3 |
| II | 10 |
| III | 20 |
| மொத்தம் | 37 |

இவற்றுள் இரு IAB வகைப்பாடசாலைகள் தரம்6-13 வரை வகுப்புகளைக் கொண்டன. ஏனைய இரு IAB வகைப்பாடசாலைகளும் மூன்று 1C வகைப் பாடசாலைகளும் தரம்1-13 வரை வகுப்புக்களைக் கொண்டன. II ஆம் வகையைச் சேர்ந்த 10 பாடசாலைகளும் தரம்1-11 வரை வகுப்புக்களைக் கொண்டன. வகை IIIஐச் சேர்ந்த இருபது பாடசாலைகளுள் 5 பாடசாலைகள் தரம் 1-9 வரையும் 2 பாடசாலைகள் தரம் 1-8 வரையும் ஏனைய 13 பாடசாலைகள் தரம் 1-5 வரையும் வகுப்புக்களைக் கொண்டன.

இத்தரவுகள் 01.04.2008 இல் உள்ள புள்ளிவிபரங்களுக்கமைவானவை.

இதேவேளை, முன்னர் இயங்கி வந்த வகை III பாட சாலைகள் ஆறு(6) இன்று தற்காலிகமாக மூடப்பட்டுள்ளன. இன்று யாழ்.மாவட்டத்தில் இயங்கிவரும் 410 பாடசாலைகளுள் கோப் பாய்க் கல்விக் கோட்டத்தில் இயங்கும் 37 பாடசாலைகள் 9.02 சதவீதமாகும். யாழ். மாவட்டத்தில் முன்பு 482 பாடசாலைகள் இயங்கி வந்தன. இன்று 72 பாடசாலைகள் மூடப்பட்ட நிலையில் 410 பாடசாலைகள் மட்டுமே இயங்கி வருகின்றன.

கோப்பாய் பிரதேசத்தின் கல்வி நிலையைப் பகுப்பாய்வு செய்யும்போது பல்வேறு அம்சங்கள் கவனத்திற் கொள்ளப்படவேண்டும். ஆனாலும், பொதுவாக இன்று கல்வி நிலையானது தேசிய மட்டத்திலான பொதுப் பரீட்சைகளில் மாணவர்களின் பெறுபேறுகளைக் கொண்டே தீர்மானிக்கப்படும் நிலை இருந்து வருகிறது. இன்று இலங்கைப் பாடசாலை மாணவர்கள்

ஐந்தாம் தரப் புலமைப்பரிசில் பரீட்சை,

க.பொ.த.(சாதாரணதர) பொதுத்தராதரப் பரீட்சை, க.பொ.த(உயர்தர) பொதுத் தராதரப் பரீட்சை என மூன்று தேசியப் பரீட்சைகளுக்குத் தோற்றுகின்றனர்.

பொதுவாக இப் பரீட்சைகளில் சித்தியடைந்தோரின் எண்ணிக்கையைக் கொண்டும் அவர்கள் பெறும் உயர் பெறுபேறுகளைக் கொண்டுமே பாடசாலையொன்றின் தரம் கணிப்புக்குள்ளாகும் நிலை பாடசாலைச் சமூகத்தினரிடையே காணப்படுகிறது. இவ்வகை அளவீட்டுத் திட்டம் எத்துணை பொருத்தமானது என்பது ஆராய்வுக்குரியது.

ஒரு பாடசாலையின் பெறுபேறுகளை ஏனைய பாடசாலைகளின் பெறுபேறுகளுடன் ஒப்பிட்டும் அல்லது ஒரு கல்விக் கோட்டப் பாடசாலைகளின் பெறுபேறுகளை ஏனைய கல்விக் கோட்டங்களின் பாடசாலைகளுடன் ஒப்பிட்டும் கல்வி நிலை பற்றிய முடிவுகளைத் தெரிவிக்கும்போது மிகுந்த கவனம் தேவை.

ஆயினும், கல்வி நிலையைத் தீர்மானிப்பதற்கான சுட்டிகளுள் பரீட்சைப் பெறுபேறு முக்கியமானது என்பது மறுக்கற்பாலதன்று.

தேசிய ரீதியிலான ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையின் சித்திப் புள்ளி மட்டம் ஆண்டுக்கு ஆண்டு மாறுபடுவதாகும். நாட்டின் பல்வேறு மாவட்டங் களையும் கருத்திற் கொண்டு, பரீட்சைக்குத் தோற்றியோரில் ஒரு குறித்த மாவட்டத்திலிருந்து ஒரு குறித்த வீதத்தினரே சித்திஎய்தக் கூடியதாக, சித்தி புள்ளி மட்டமானது.

மத்திய நிலையில் அரசினால் தீர்மானிக்கப்படுவதாகும். உதாரணமாக 140 சித்திப் புள்ளி மட்டமாயின், இரு பாடங்களிலும் 140க்குக் குறைவான புள்ளிகளைப் பெற்றவர்கள் இப் பரீட்சையில் சித்தியடையாதவர்களாகவே கருதப்படுவர்.

கலாநிதி த.கலாமணி
சிரேஷ்ட விரிவுரையாளர்,
கல்வியியற் துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

இதனால் ,139 புள்ளிகளைப் பெற்ற பிள்ளை இப் பரீட்சையில் சித்தி அடையவில்லையே என்ற ஏக்கத்திற்குட்படுவர். பெற்றோரினதும் அயலவர்களதும் ஏளனமும் கண்டனமும் கூட பிள்ளையில் தாக்கத்தை ஏற்படுத்தும். (தொடரும்)

# உலக வெப்பமயமாதலை தடுக்கும்நடவடிக்கையாக ஐ.நா.அலுவலகத்தில் ஏசியை கட்டுப்படுத்த உத்தரவு

(நியூயோர்க்)

அமெரிக்காவில் உள்ள ஐக்கிய நாடுகள் சபை கட்டடத்தில், ஏசி போட்டுக் கொள்வதை குறைத்துக்கொள்ள உத்தரவு போடப்பட்டுள்ளது; ஏசி குளுமை குறைவாக இருப்பதால், இறுக்கமான உடை அணிய வேண்டாம் என்றும் ஊழியர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். உலக வெப்ப மய மாதலுக்கு பிரிஜ், ஏசி தொலைக்காட்சிப் பெட்டி போன்ற எலக்ட்ரோனிக் சாதனங்களும் முக்கிய காரணம் அது வெளியிடும் காபன் வாயுவால் உலக வெப்பமயம் அதிகரிக்கிறது.

உலக வெப்பமயமாதலை தடுக்க பல நடவடிக்கை எடுத்துவரும் ஐ.நா.சபை, தன் தலைமை அலுவலகத்தில் இது தொடர்பாக அதிரடி நடவடிக்கை எடுத்துள்ளது. இதன்படி ஏசி சீதேஷ்ண நிலையை 22இல் இருந்து 25வரை உயர்த்தி வைக்கவும், அலுவலகப் பிரிவு இயங்காத நேரத்தில் ஏசியை நிறுத்தி வைக்கும்படியும் ஊழியர்களுக்கு உத்தரவு போடப்பட்டுள்ளது. நியூயோர்க்கில் பலமாடிக் கட்டடத்தில் உள்ள ஐ.நா.அலுவலக ஊழியர்கள் வழக்கமாக இறுக்கமான உடைகள், கோட் சூட்டுடன் டை கட்டிவருவர். போதுமான ஏசி இல்லாமல் இருக்கும் என்பதால் தளர்வான உடைகளை அணிந்து வரும்படி சலுகை அளிக்கப்பட்டுள்ளது. இந்த நடைமுறை கடந்த முதலாம் திகதியிலிருந்து அமுலுக்கு வந்துள்ளது.

இந்த ஒரு மாதம் இந்த நடைமுறை நல்ல பலன் அளித்தால் குளிர்காலத்திலும் வெது வெதுப்பான சீதோஷ்ண நிலையை குறைத்து காபன் வாயு வெளியேற்றத்தை குறைக்க திட்டமிடப்பட்டுள்ளது. ஒரு மாத சோதனை நடவடிக்கையில் ஏசி யின் குளுமையை 10 சதவீதம் குறைத்ததன் மூலம், 300 பெண் காபன் ரொக்சைட்டு வாயு வெளியேறுவது தடுக்கப்படும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. (அ-6)

## இந்தியரை தோற்கடித்த மலேசிய அமைச்சர்

மலேசிய பொதுநலவாய பாராளுமன்ற சங்க நிறைவேற்றதிகார சபையின் தலைவராக மலேசிய கலாசார அமைச்சர் ஷபி அப்தால் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

அவர் இந்தியாவைப் பிறப்பிடமாகக் கொண்ட சுவராஜ் போலை 50 வாக்குகளால் தோற்கடித்துள்ளார்.

மேற்படி தலைவர் தெரிவுக்கான வாக்கெடுப்பில் ஷபி அப்தால் 152 வாக்குகளையும் சுவராஜ் போல் 102 வாக்குகளையும் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-6)

## வியட்நாமை புயல் தாக்கியதில் 125 பேர் பலி என அச்சம்

வியட்நாமின் மலைகள் சூழ்ந்த வட பகுதியை ஞாயிற்றுக்கிழமை புயல் தாக்கியது. இதில் குறைந்தது 125பேர் பலியாகி இருக்கக்கூடும் என்று அஞ்சப்படுகிறது. கமூரி என்று அழைக்கப்படும் இந்த சூறாவளிப் புயலால் வடக்கு வியட்நாம் பகுதியில் கடும் மழை பெய்தது. இதனால் ஆங்காங்கே வெள்ளம் நிலச்சரிவு ஏற்பட்டது.

வெள்ளம் சூழ்ந்த பகுதிகளுக்கு ஆயிரக் கணக்கில் பாதுகாப்புப் படையினரும், காவல் துறையினரும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர். வீடிழந்து தவிப் போருக்கு மருந்து, உணவுப் பொருள், குடிநீர் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ஞாயிற்றுக்கிழமை அதிகாலை நிலவரப்படி 86பேர் இறந்தது உறுதி செய்யப்பட்டுள்ளது. 39பேர் காணாமல் போனதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

புயல் தாக்குவதற்கு முன் இந்த பகுதியில் 2 நாளுக்கு முன்பு மழை தொடங்கியது. இதனிடையே, வெள்ளம் காரணமாக ஹனோய், லாவ் சாய் இடையே உள்ள ரயில் பாதையில் ரயில் என்ஜின் தலைகுப்புற கவிழ்ந்தது எனினும் யாருக்கும் காயம் ஏற்படவில்லை. மேலும்

**உலக தரிசனம்**

ரயில் பாதையை யொட்டி உள்ள நெடுஞ்சாலை நிலச்சரிவு காரணமாக ஆங்காங்கே துண்டிக்கப்பட்டுள்ளது. (அ-6)

## வடதுருவத்தில் ஐஸ் வேகமாக உருகுகிறது விஞ்ஞானிகள் கவலை தெரிவிப்பு

வட துருவத்தில் ஐஸ் பாறைகள் வேகமாக உருகுவதாக விஞ்ஞானிகள் கவலை தெரிவித்துள்ளனர். இதனால் 2013ஆம் ஆண்டில் ஆர்டிக் பகுதியில் ஐஸ் இருக்காது என்றும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

புவி வெப்பமடைவதால் இத்தகைய மாற்றம் நிகழ்வதாக விஞ்ஞானிகள் குறிப்பிட்டுள்ளனர். 60 ஆண்டுகளில் ஆர்டிக் பகுதியில் உள்ள பனிப்பாறைகள் உருகி கடல் மட்டம் மேலே உயரும் என முன்னர் கணிக்கப்பட்டிருந்தது. ஆனால் செயற்கைக்கோள் படம் மற்றும் கம்ப்யூட்டரில் திரட்டப்பட்ட தகவல்கள் அடிப்படையில் அடுத்த ஐந்து ஆண்டுகளுக்குள் பனிப்பாறைகள் உருகிவிடும் என விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். 2007ஆம் ஆண்டு ஆர்டிக் பகுதியில் இருந்த நிலையுடன் தற்போதைய நிலையை ஒப்பிட்டுப் பார்க்கும்போது பல இலட்சம் சதுர கிலோமீற்றர் வரையிலான ஐஸ் பாறைகள் உருகியுள்ளது தெரியவந்துள்ளது என்று பேராசிரியர் வியஸ்லா மஸ்லோவ்ஸ்கி குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்காவின் கடற்படை சூப்பர் கம்யூட்டர் அளித்துள்ள தகவல்களை அடிப்படையாகக் கொண்டு அவர் இத்தகவலை வெளியிட்டுள்ளதாக லண்டனில் வெளியாகும் அப்சர்வர் நாளேடு செய்தி வெளியிட்டுள்ளது. 2013ஆம ஆண்டு கோடைக்காலத்தில் ஆர்டிக் பகுதியில் ஐஸ் இருக்காது என்று விஞ்ஞானிகள் குழு கண்டறிந்துள்ளது.

ஆர்டிக் பனிப் பாறையின் கெட்டித் தன்மையைக் கருத்தில் கொண்டு 2070ஆம் ஆண்டு உருகலாம் என கருதினோம். ஆனால் புவி வெப்பமடைவதால் உருகும் தன்மை அதிகரித்துள்ளது. அத்துடன் பனிப்பாறையின் கெட்டித் தன்மை, நாங்கள் எதிர்பார்த்த அளவை விட மெல்லியதாக உள்ளதும் காரணமாக இருக்கலாம் என கேம்பிரிஜ் பல்கலைக்கழகத்தின் விஞ்ஞானி பீட்டர் வாடெம் தெரிவித்தார். (அ-6)

## தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் அல்ஜீரியாவில் 8பேர் பலி

வட அல்ஜீரியாவில் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற தற்கொலை குண்டுத்தாக்குதலில், 8 பேர் பலியாகியுள்ளதுடன் 19பேர் காயமடைந்துள்ளனர்.



தலைநகர் அல்ஜியர்ஸிலிருந்து கிழக்கே 50 கிலோ மீற்றர் தொலைவிலுள்ள ஷெம்மோரி நகரின் வடக்கே மேற்படி குண்டுத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

அந்நகரிலுள்ளபொலிஸ் நிலையத்தின் வெளிப்புறமாக நிறுத்தப்பட்டிருந்த வாகனமொன்றில் இக்குண்டு பொருத்தப்பட்டிருந்ததாக தெரிவிக்கப்படுகிறது. இக்குண்டுத் தாக்குதலுக்கு எந்தவொரு குழுவும் இதுவரை உரிமை கோரவில்லை. (அ-6)

## சேலை உடுத்தினால் சிறை நைஜீரியாவில் புதிய சட்டம்?

(ஜோகன்னஸ்பேர்க்)

நைஜீரியா செல்லும் இந்திய பெண்களும், அங்கு வசிக்கும் இந்திய பெண்களும் இனி சேலை உடுத்தமுடியாது. அப்படி உடுத்தினால், அவர்கள் சிறைத் தண்டனையை எதிர்கொள்ள நேரிடும். இது தொடர்பான புதிய சட்டம் அங்கு அமுலுக்கு வரவுள்ளது. நைஜீரிய பெண்கள் உடை அணியும் போது, அவர்களின் இடுப்புப் பகுதி தெரியக் கூடாது. அப்படி இடுப்புப் பகுதி தெரியும் வகையில் உடை அணிந்தால் அவர்களுக்கு மூன்று மாத சிறைத்தண்டனை அல்லது 4.ஆயிரத்து 500ரூபாய் அபராதம் விதிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

புதிய சட்ட மசோதா தற்போது அந்நாட்டில் விவாதத்தில் உள்ளது. இந்த மசோதா நிறைவேறிவிட்டால், நைஜீரியாவில் உள்ள இந்தியப் பெண்கள், சேலை அணிந்தாலும், அவர்கள் சிறைத்தண்டனையை எதிர்கொள்ள நேரிடும். அதேபோல், அங்கு செல்லும் இந்திய பெண்களும் சேலை உடுத்த முடியாது. இதற்கு பெண்கள் உரிமை அமைப்புகள் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளன. அதே நேரத்தில், முஸ்லிம் தலைவர்கள் வரவேற்றுள்ளனர்.

ஆபாசமாக உடை அணிவதே, நாட்டில் ஊழல் பெருகக் காரணம், இப்படி ஊழல் மூலம் பணம் சேர்த்தவர்கள் பெரிய அளவிலான வீடுகளை கட்டி, அங்கு பெண்களை மறைத்து வைத்து உல்லாச வாழ்க்கை வாழ்கின்றனர். அவர்களுக்காக ஏராளமான பணத்தை செலவிடுகின்றனர். அரை குறையாக ஆடை அணியும் பெண்களால் ஆண்கள் ஈர்க்கப்படுகின்றனர். அதனால் தவறுகள் நடப்பதும் அதிகரிக் கிறது என தெரிவித்துள்ளனர். (அ-6)

## கரு முட்டை தானம் செய்ய அமெரிக்க பெண்கள் ஆர்வம்

(நியூயோர்க்)

அமெரிக்காவில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக பல பெண்கள், தங்களது கரு முட்டைகளை விற்பனை செய்வதில்லை. ஆர்வம் காட்டி வருகின்றனர். அமெரிக்காவில், சமீப காலமாக கடும் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக நடுத்தர குடும்பத்தினர் மற்றும் குறைந்த சம்பளம் பெறுவோர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

தங்களது அன்றாட தேவைகளை நிறைவேற்ற முடியாமல் பாதிப்பிற்கு ஆளாகியுள்ள பெண்கள், கரு முட்டைகளை குழந்தைகள் நல மருத்துவமனைகளுக்கு விற்பனை செய்வதில் ஆர்வம் காட்டி வருகின்றனர். அமெரிக்க பெண் ஒருவர் கூறுகையில், அத்தியாவசியப் பொருட்களின் விலை பல மடங்கு அதிகரித்துவிட்டன.

செலவுகளுக்கு போதிய பணம் இல்லாததால் அவதிப்பட்டு வருகிறேன். இரண்டு குழந்தைகள் உள்ளனர். அவர்களின் படிப்பு செலவுக்கு கூட பணம் இல்லை. இதனால் கரு முட்டைகளை விற்பனை செய்ய திட்டமிட்டுள்ளேன் என்றார்.

குழந்தைகள் நல மருத்துவமனையில் பணிபுரியும் டாக்டர் சூசன்வாலர் கூறியதாவது, கரு முட்டைகளை தானம் செய்ய விருப்பம் தெரிவித்து ஏராளமான பெண்கள் போன் மூலம் விசாரித்து வருகின்றனர். நிதி தேவைக்காகவே பல பெண்கள் கரு முட்டைகளை தானம் செய்ய விரும்பு கின்றனர். இருந்தாலும் கரு முட்டைகளை ஒரு பெண்ணிடம் இருந்து பெறுவதற்கு முன், அவருக்கு பல்வேறு விதமான மருத்துவ பரிசோதனைகள் நடத்தப்பட வேண்டும். இது அவ்வளவு எளிதான விஷயம் அல்ல என்றார். (அ-6)

## வெளிநாட்டினருக்கு உணவு பரிமாறும்போது அவர்களுடன் தேவையில்லாமல் பேசக்கூடாது ஊழியர்களுக்கு பீஜிங் பொலிஸார் உத்தரவு

(பீஜிங்)

சீன தலைநகர் பீஜிங்கில் வசிக்கும் பொது மக்கள், பொலிஸாரின் கெடுபிடியால் கடும் அவதிக்கு ஆளாகியுள்ளனர். சீனாவில் ஒலிம்பிக் போட்டிகள் கோலாகலமாக துவங்கியுள்ளதை அடுத்து பீஜிங் உள்ளிட்ட முக்கிய நகரங்களில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

பீஜிங்கில் மட்டும் ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்ட பொலிஸார் பாதுகாப்பு பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். அங்கு வசிக்கும் அனைத்து பொதுமக்களுக்கும் அடையாள அட்டை தரப்பட்டுள்ளது. வீட்டைவிட்டு வெளியில் வரும்போது கண்டிப்பாக அதை எடுத்து வர வேண்டும். வேறு இடங்களில் இருந்து வீட்டிற்கு விருந்தாளிகள் வந்தால்,அது குறித்து பொலிஸாருக்கு முன் கூட்டியே தகவல் தெரிவிக்க வேண்டும்.

விருந்தினரின் பெயர், அவரது இரத்தப் பிரிவு, தொழில், எதன் மூலமாக அவருக்கு வருமானம் கிடைக்கிறது. அவருக்கு அரசியல் தொடர்பு உள்ளதா என்பது போன்ற விவ ரத்தை பொலிஸாருக்கு தெரிவிக்க வேண்டும். ஓட்டல்களில் பணிபுரியும் அனைத்து ஊழியர்களையும் அழைத்து, ஆலோசனைக் கூட்டங்களை பொலிஸார் நடத்தியுள்ளனர்.

வெளிநாட்டினருக்கு உணவுப் பொருட்கள் பரிமாறும் போது அவர்களுடன் தேவையில்லாமல் பேசக்கூடாது. அவர்களுக்கு தேவையான உணவு வகைகள் குறித்து மட்டுமே பேச வேண்டும் என ஊழியர் களுக்கு பொலிஸார் உத்தரவிட்டுள்ளனர். பொலிசாரின் இந்த கெடுபிடியால், பீஜிங் வாசிகளும், அந்த நகருக்கு புதிதாக வருவோரும் கடும் அவதிக்கு ஆளாகியுள்ளனர். ஒலிம்பிக் போட்டிகள் முடிந்தால் போதும் என்ற நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். (அ-6)

# பொதுமக்கள் மீதான தாக்குதலை தடுப்பதற்கு ஐ.நா., இந்தியாவின் தலையீடு அவசியம்

## தமிழ் முஸ்லிம் கட்சிகள் வலியுறுத்தல்; அரசின் நடவடிக்கைக்கும் கண்டனம்

(கொழும்பு)

படையினரின் விமானக் குண்டு வீச்சு, ஷெல் தாக்குதல்களில் வன்னியில் அப்பாவி மக்கள் பலியாகி வருகின்றனர். அப்பாவி பொதுமக்கள் மீதான தாக்கு தலை அரசாங்கம் உடன் நிறுத்த வேண்டும். அப்பாவிப் பொது மக்கள் மீதான தாக்குதலை தடுக்க ஐக்கிய நாடுகள் சபை மற்றும் இந்தியா உரிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்று தமிழ், முஸ்லிம் கட்சிகள் அவசர கோரிக்கை விடுத்துள்ளன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், மேலக மக்கள் முன்னணி ஆகிய கட்சிகளே இக்கோரிக்கைகளை முன் வைத்துள்ளன. வன்னியில் கடந்த சில நாட்களாக இடம் பெற்றுவரும் ஷெல் தாக்குதல் மற்றும் விமானக் குண்டு வீச்சினால் அப்பாவி பொது மக்கள் பலர் கொல்லப்பட்டும் பெருமளவானோர் காயமடைந்துமுள்ளனர். இது குறித்து கருத்து தெரிவிக்கையிலேயே இக்கட்சிகளின் தலைவர்கள் மேற்கண்டவாறு கூறினர்.

யுத்தத்தின் போது கடைபிடிக்க வேண்டிய மனிதாபிமான எல்லைகள் மீறி அரசாங்கம் விமானக் குண்டுத்தாக்குதல்களை நடத்தி மக்களை கொலை செய்வதை வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

இவ்விடயத்தில் ஐ.நா. சபை உடனடியாக தலையிட்டு நீதியை பெற்றுக்கொடுக்க வேண்டும் என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப் பினருமான ரவூப், ஹக்கீம் தெரி வித்தார்.

இது தொடர்பாக ரவூப் ஹக்கீம் எம். பி. மேலும் தெரிவிக்கையில்,

மனிதாபிமான எல்லைகளை மீறி அரசாங்கம் விமானக் குண்டுத் தாக்குதல்களையும் ஷெல் தாக்குதல்களையும் நடத்துகிறது. இந்தக் கண்மூடித்தனமான தாக்குதல்களால் அப்பாவி மக்கள் பலியாகின் றனர்.

இது யுத்தத்தின்போது கடைபிடிக்க வேண்டிய கடப்பாடுகளை மீறுவதாகும். அரசாங்கம்சட்டங்களை மதிப்பதில்லையென்பது இதன் மூலம் புலனாகிறது.

ஊடகங்களில் உண்மையை எழுத முடியவில்லை. அவ்வாறு எழுதும் ஊடகவியலாளர்கள் அச்சுறுத்தப்படுகின்றார்கள்.

இன்று உத்தியோகப்பற்றற்ற ஊடகத் தணிக்கை அமுலில் உள்ளது. உண்மைகள் சாகடிக்கப்படுகின்றன.

எனவே அரசாங்கத்தின் கண்மூடித்தனமான நடவடிக்கைகள் தொடர்பில் சர்வதேச நாடுகள் கவனம் செலுத்த வேண்டும்.

விசேடமாக ஐ.நா. சபை இப் பிரச்சினையில் தலையிட்டு மக்களைப் பாதுகாப்பதோடு சர்வதேச யுத்த சட்டங்களை இலங்கை அரசாங்கம் மதிக்கவேண்டுமென்ற அழுத்தத்தை கொடுக்கவேண்டும்.

### மேலக மக்கள் முன்னணி

தமிழ் மக்களை மீட்பதற்கான நடவடிக்கையினை தான் மேற்கொள்வதாக அரசாங்கம் கூறுகிறது.

அப்படியானால் குண்டுகளை வீசி தமிழ் மக்களைப் படுகொலை செய்வது தான் அரசாங்கத்தின் மீட்பு நடவடிக்கையா? என்று கேள்வி எழுப்பும் மேலக மக்கள் முன்னணியின் தலைவரும் கொழும்பு மாவட்ட எம்.பியுமான மனோகணேசன், அப்பாவி பொதுமக்கள் கொல்லப்படுவதை தடுக்க இந்தியா நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கோரினார்.

இது குறித்து அவர் மேலும் கருத்துத்தெரிவிக்கையில் ,

இம் மாவட்டங்களில் வாழும் தமிழ் மக்களை மீட்டொடுப்போம் எனக்கூறும் அரசாங்கம் அவர்களைக் குண்டுபோட்டு கொலை செய்கிறது இது தானா அரசாங்கத்தின் மீட்புப்பணி?

இத் தாக்குதல் மூலம் அரச அதிகாரியான முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி இமல்டா சுகுமார் காயப்பட்டுள்ளதோடு அவரது இல்லமும் சேதமடைந்துள்ளது.

அரசாங்கம் இதனைத் தெரிந்து கொண்டும் தாக்குதல் நடத்தப்படவில்லை என மறுப்பது வெட்கப்பட வேண்டிய விடயமாகும்.

அப்படியானால் அரச அதிகாரியான திருமதி இமல்டாவும் அரசாங்கம் அடையாளப் படுத்துவதைப் போன்ற பயங்கரவாதியா எனக் கேட்க விரும்புகிறேன்.

விமானக் குண்டுவீச்சு, எறிகணைத்தாக்குதல்களால் தமிழ் மக்கள் கொல்லப்படுவதை சர்வதேச சமூகம் மௌனமாக வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கின்றது.

விசேடமாக இந்தியா இவ்விடயத்தில் அதிகளவு கரிசனை காட்ட வேண்டும். அண்மையில் சார்க் மாநாட்டிற்காக இலங்கை வந்த தலைவர்களுள் பிரதமர் மன்மோகன் சிங்கிக்கு அதிக முக்கியத்துவம் வழங்கப் பட்டது.

அனைத்துத்தரப்பினரது கவனமும் அவரைச் சூழந்தே காணப் பட்டது. எனவே ,தமிழ் மக்களை பாதுகாக்கும் கடமையை இந்தியாவால் இலகுவாக மேற்கொள்ளமுடியும். அதனைச் செய்யாது அமைதி காப்பது தமிழ் மக்களுக்கு செய்யும் துரோகம் ஆகும்.

கடத்தல் ,கப்பம்,மனித உரிமை மீறல்களால் பாதிக்கப்பட்டிருக்கும் தமிழ் மக்கள் இன்று விமானத் தாக்குதலால் உயிருக்கும் உத்தரவாதம் இன்றி வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். இலங்கையில் உள்ள உண்மையான நிலைவரங்களை இங்குள்ள இந்தியத்தூதரகம் இந்திய அரசாங்கத்திற்கு தெளிவு படுத்துகிறதா இல்லையா என்ற கேள்வியை மேலக மக்கள் முன்னணியின் தலைவரும் கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரென்ற ரீதியிலும் கேட்க விரும்புகிறேன் என்றார். (அ-6)

# இலங்கையிலிருந்து இராமேஸ்வரம் சென்றவரை மண்டபம் அகதி முகாமில் பதிய மறுப்பு

(சென்னை)

இலங்கையில் இருந்து இராமேஸ்வரம் சென்றவரை மண்டபம் முகாமில் அகதியாக பதிவு செய்ய பொலிஸார் மறுத்து விட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இது குறித்து வடிவேல் ஏசுதாஸ் கூறியதாவது, மன்னாரிலிருந்து என்னுடன் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஒரு ஆண் ,ஒரு பெண் மற்றும் 3 குழந்தைகள் உட்பட 5 பேர் அகதியாக வந்தனர். படகோட்டிகள் எம்மை இராமேஸ்வரம் துறை முகத்தில் இறக்கிவிட்டு சென்று விட்டனர். என்னுடன் வந்த 5 பேரும் திருச்சியில் அவர்களது உறவினர் வீட்டிற்கு சென்று விட்டனர். நான் எனது பெயரை அகதியாக பதிவு செய்வதற்காக பொலிஸ் நிலையம் சென்றேன். அதற்கு அங்கிருந்த பொலிஸார் தனுஷ் கோடி காவல்நிலையத்தில்தான் பெயர்பதிவு செய்து கொள்ள முடியும் எனத் தெரிவித்தனர். பதிவு செய்த பொலிஸார் மறுத்துவிட்டதாகதெரிவிக்கப்படுகிறது.

இதையடுத்து தனுஷ் கோடி பொலிஸ் நிலையம் சென்றேன். நான் அகதியாக வந்த விபரத்தைக் கூறி பெயரைப் பதிவு செய்து கொள்ளும் படி கேட்டுக்கொண்டேன். அப்போது பொலிஸார், கடந்த சில தினங்களாக தமிழகத்திற்கு அகதிகளாக எவரும் வரவில்லை என்று தெரிவித்ததோடு பெயரை பதிவு செய்ய மறுத்து விட்டனர்.

இராமேஸ்வரம் நீதிமன்றத்தில் அகதியாகப் பதிவு செய்யும் படி உத்தரவிடுமாறு மனு செய்தேன். மனுவை விசாரித்த நீதிபதி விஜயகுமார், நீதிமன்றத்தின் மூலம் அகதிகளை பதிவு செய்ய வலியுறுத்த முடியாது. சம்பந்தப்பட்ட காவல் நிலையத்தில் தான் பதிவு செய்ய முடியும் என்று கூறி அவரது மனுவை தள்ளுபடி செய்தார்.

இதைத் தொடர்ந்து மண்டபம் அகதிகள் முகாமுக்கு சென்று வடிவேல் ஏசுதாசிடம் சென்னை யில் உள்ள அகதிகள் மறு வாழ்வு துறை ஆணையரிடம் கடிதம் பெற்று வந்தால் தான் இங்கு பெயர் பதிவு செய்ய முடியும்என்று கியூ பிரிவு பொலிஸார் தெரிவித்துவிட்டதாக கூறப்படுகிறது. (அ-6)


# ஊழியர் சேமலாப நிதியை செலுத்தாத, தொழில் வழங்குநர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை

(கொழும்பு)

ஊழியர் சேமலாப நிதியை செலுத்தாத தொழில் வழங்கு நர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கான நடவடிக்கைகள் விஸ்தரிக்கப்பட்டுள்ளதாக தொழில் திணைக்களம் தெரிவிக்கின்றது. இதற்கென அதிகாரிகள் மட்ட குழுவொன்றைநியமித்துள்ளதாகதொழில் ஆணையாளர் டி. எஸ். எதிரிசிங்க குறிப்பிட்டுள்ளார்.

இதே வேளை ஊழியர் சேமலாப நிதியை பெறுபவர்களுக்கு புதிய வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுக்க தீர்மானித்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். இதற்கமைய கையடக்க தொலைபேசி மூலம் தத்துதமது ஊழியர் சேமலாப நிதியை கணக்கு தொடர்பான தகவல்களை பெற்றுக் கொள்ளும்வசதிகளை எதிர்காலத்தில் ஏற்படுத்திக் கொடுப்பதற்கு தொழில் திணைக்களம் தீர்மானித்துள்ளது. இதற்கு தேவையான தொழில் நுட்ப வசதிகளை வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தொழில் ஆணையாளர் மேலும் தெரிவித்தார். (அ)

## நல்லூரான் திருவடிக்கு இன்று ஏழாம் திருவிழா



## வினை தீர்க்கும் வேலவா

கொடியாய் சேவல் கொண்டனே!
கொடிச்சி மகளை மணந்தவனே !
நெடிய வேலைப் பற்றியவா!
நீல மயிலில் சுற்றியவா!
மடியும் உயிர்கள் பாரையா!
மண்ணில் போரைத் தீரையா!
குடிகள் தம்மைக் காரையா !
குமரன் உனக்குப் பேரையா!

*கா. கார்த்திகேசு*
*நல்லூர்.*

## முருகன் நிழலாக வருவான்

சிவனாரின் உருவான திருமாலின் மருகன்
திருஞான சம்பந்தப் பெயருக்கும் உரியன்
தினை தந்த குறவள்ளி மனதிற்கு இனியன்.
சிவகாமி மடிமீது விளையாடிய முருகன்.

தொழுவார்க்குத் துணை போல நிழலாக வருவான்
துயர் தீர. சுபமான திருநீறு தருவான்
கனிவாயில் அமுதூறும் உலகாளும் பெருமான்
கவிபாடக் கவிபாட நல்லூரில் வருவான்.

*புலவர்.செ. பரமநாதன்*
*தாவடி*

## நல்லைக் கந்தனுக்கு அரோகரா !

நல்லைக் கந்தனுக்கு அரோகரா
நற்றமிழ் வேலனுக்கு அரோகரா
தில்லை ஆடும் சிவன் மைந்தனுக்கு அரோகரா
தீர்வு தரும் சரவணனுக்கு அரோகரா
புள்ளி மயில் வாகனனுக்கு ஆரோகரா
பூலோக கைலாச நாதனுக்கு அரோகரா
வள்ளி குஞ்சரி கணவனுக்கு அரோகரா
வழிபட வாழ்வு தரும் வேலனுக்கு அரோகரா.

*மதுரகவி காரை*
*எம்.பி. அருளானந்தன்*

## தீராப்பிணி யாவும் தீர்த்திடும் நல்லைப்பெருமான்

தீராப்பிணி யாவுந் தீர்த்திடுவார் வெய்ய தீவினைகள்
வாராமல் வந்தெம்மைக் காத்திடுவார்.எங்கள் வாழ்வினிலே
போராடும் மைம்புலக் கொற்ற மடங்கப் பொசுக்கிடுவார்.
சீராரும் நல்லைப் பெருமான் வணங்கிடில்அக்கணமே.

*கவிமணி.கந்த முருகேசு.தாசனார்.*

## விதிக்கொரு சதி செய்ய

நல்லூர் எனும் நாமம்
தொல்வினை அகற்றும்
கந்தன் எனும் நாமம்
கர்மம் துடைக்கும் !
முருகா எனும் நாமம்
முத்தியைக் கொடுக்கும்
விரைக அவன் கோயில்
விதிக்கொரு சதி செய்ய!

*திருமதி ஜெயக்குமாரி கந்தவேள்.*

## கரும்பினும் இனிய கந்தன்

கரும்பினும் இனியதெம் கந்தனின் நாமம்
இரும்பினும் சென்றிடும் இலகுவில் –இடரகற்ற
வருந்திடும் வாழ்வில் வாடியேயெம் குலமக்கள்
பெருத்துயர் கற்ற புனிதா வா

*மா.கனநாதன்*

இலங்கை வங்கி

BOC

தேசத்தின் வங்கியாளர்

# 69-வது ஆண்டு நிறைவைக்கொண்டாடும் இலங்கை வங்கியினால் நடைமுறைப்படுத்தப்படும் பருவகாலத்திற்கான கணக்குகள்

## 01. பொன்அரும்புக் கணக்குகள்

### உங்கள் பிள்ளை தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்கு தோற்றுகின்றாரா?

- ஆம் எனில் அப்பிள்ளைக்கு இலங்கை வங்கியில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை(15.08.2008)இற்கு முன் ரூபா 2,500/- வைப்பிலிட்டு பொன் அரும்புக்கணக்கொன்றினை ஆரம்பித்து வங்கியின் புலமைப் பரிசில் ஒன்றைப்பெறுவதற்கான வாய்ப்பை அளியுங்கள்.

- நாடளாவிய ரீதியில் 1250 புலமைப்பரிசில் வெற்றியாளர்கள் வருடந்தோறும் ரூபா.10,000பெறுமதியான புலமைப் பரிசிலைப் பெறுவதற்கு தகுதியுடையவர் ஆகின்றார்கள்.
அத்துடன் கவர்ச்சிகரமான சான்றிதழும் கூட , உங்கள் பிள்ளைக்கும் இச் சந்தர்ப்பத்தை வழங்குங்கள்.

- இக்கணக்கினைப் பேணுவதனால் இலவச வைத்திய காப்புறுதியையும் பெற்றுக் கொள்ளமுடியும். (இதற்கு ரூபா 5, 000/- கணக்கில் வைத்திருத்தல் அவசியம்)
அத்துடன் இலங்கை வங்கியினால் புதிதாகஅறிமுகம் செய்யப்பட்ட சுப்பர்வைப்புக்கணக்குகளைஆரம்பித்து 14% வித வட்டியைப் பெறுங்கள்அதற்கான வட்டியையும் அதே தினத்தில்பெறும் வாய்ப்பு உங்களுக்கு உள்ளது.

## 02.BOC Super Deposit Accounts.

- அத்துடன் இலங்கை வங்கியினால் புதிதாக அறிமுகம் செய்யப்பட்ட சுப்பர் வைப்புக்கணக்குகளை ஆரம்பித்து 14 % வட்டியை பெறுங்கள். அதற்கான வட்டியையும் அதே தினத்தில் பெறும் வாய்ப்பு உங்களுக்கு உள்ளது.
மேலும் சீட்டிழுப்பு மூலம் 3 டொயாடா மற்றும் மாருதி கார்கள் பெறும் நன்மை.

## 03. 18+ சேமிப்புக்கணக்குகள்

- 18+ கணக்குகள் வைத்திருப்பதன் மூலம் உயர் கல்விக்கான புலமைப்பரிசில் ரூபா 30,000 /- பெற வாய்ப்பு, திருமணபரிசாக தங்க நாணயம், பிறக்கும் முதற்குழந்தைக்கு பரிசுகள் மற்றும் காப்புறுதி வசதிகள்.

- 300 இற்கும் மேற்பட்ட வங்கிக்கிளைகளில் கணனி வலைப்பின்னலூடான சேவை.

- 14+,18+ கணக்குகளில் ரூபா 2,500/- ரூபா 5,000 /-, உம் அதற்கு மேலும் வைப்புச் செய்பவர்களுக்கு பிரபல கிரிக்கெற் வீரர் அஜந்த மெண்டிஸின் படம் பொறிக்கப்பட்ட ரீசேட் மற்றும் தொப்பிகள் வழங்கப்படுகின்றது.

**வங்கிச் சேவையில் முன்னோடியாக 69 வருடங்களைப்பூர்த்தி செய்துள்ள தேசத்தின் வங்கியாளரான இலங்கை வங்கி உங்களுக்கு நம்பிக்கையும் உத்தரவாதத்தினையும் வழங்குகிறது.**

**இன்றே அருகிலுள்ள வங்கி முகாமையாளரைத் தொடர்பு கொண்டு உங்கள் வங்கித்தேவையைப் பூர்த்தி செய்யுங்கள்**

**“இலங்கை வங்கி தேசத்தின் வங்கி”**

(சி/1399)

ஓர் ஆடு வேலியைத் தாண்டினால் - மற்றவை அதனையே தொடரும்.
-ஸ்பெயின்

வலம்புரி

## யாழ்ப்பாணக் கலாசாரத்தை சீரழிக்கும் வீடியோப் படப்பிடிப்புக்கள்

யாழ். குடாநாட்டில் கலாசார சீரழிவுகள் மலிந்து போயுள்ளதான தகவல்கள் நெஞ்சை ரணமாக்கிறது.

இறுக்கமான வாழ்வியல் நடைமுறைகளைக் கொண்ட யாழ்ப்பாணத்தில் இப்படியொரு விபரீதமா? என்ற ஏக்கம் கலந்த வினாவுக்கு உடனடியாகத் தீர்வு காண முடியாது போனால் நிலைமை மோசமடையும் என்பது மறுக்க முடியாத உண்மை.

இத்தகைய கலாசார சீரழிவுகளின் விளைவாக தெருவோரங்களில் சிசுக்களை வீசி விட்டுத் தப்பியோடும் மகா பாவம் நடந்தேறுகின்றது.

தவறான நடத்தை மூலம் மகவைப் பெற்று தாய்மையின் பெருமைக்கே இழுக்குத் தேடும் காரியத்தைக் கௌரவத்தின் பேரால் செய்து முடிக்கும் நிலைமை யாழ்ப்பாணக் கலாசாரத்திற்கு ஆரோக்கியமானதல்ல.

பெற்ற சிசுவை, வீதியில் வீசி விட்டுப்போகும் காரியத்தை ஐந்தறிவு படைத்த மிருகங்கள் கூட செய்யாதென்பது சொல்லித் தெரியவேண்டியதன்று.

யாழ்ப்பாணத்தில் ஆங்காங்கே இடம்பெறும் சிசுவீசல் படலத்திற்கு இப்போதே முற்றுப்புள்ளி வைக்கத். தவறும் பட்சத்தில், நிலைமை மோசமடையவும் அதன் காரணமாக பெற்றோரற்ற குழந்தைகளை சமூகம் பொறுப்பேற்கவும் எதிர்காலத்தில் இத்தகைய குழந்தைகள் பழிக்கிடமாக, ஏளனத்திற்குரியவர்களாக வாழும் பரிதாபமும் ஏற்பட இடமுண்டு.

எனவே சமுதாய சீரழிவை ஒழித்துக் கட்டுவதில் பெற்றோர்களின் பொறுப்பு முக்கிய இடத்தை வகிக்கின்றதென்னும் கருத்தை கடந்த சில தினங்களுக்கு முன்பும் இவ்விடத்தில் சுட்டிக்காட்டியிருந்தோம்.

இருந்தும் மீள வலியுறுத்தும் நிலையைக் கடந்த ஒரு சில தினங்களில் யாழ்ப்பாணத்தில் நடந்த சம்பவங்கள் ஏற்படுத்தி விட்டது.

தொலைக்காட்சிகளின் ஆக்கிரமிப்பு, மாணவர்களிடையே ஆதிக்கம் பெற்றுள்ள கையடக்கத் தொலைபேசிப் பயன்பாடு என்பவற்றுக்கு மேலாக, பெண்பிள்ளைகளின் பிறந்தநாள் மற்றும் ருது சாந்தி போன்ற நிகழ்வுகளில் வீடியோப் படப்பிடிப்பாளர்களின் விரசத்தனமான படப்பிடிப்புக்கள், ருது சாந்திக்குப் பின்னர் வெளியிடங்களில் இடம்பெறும் 'மிக்ஸிங்' படப்பிடிப்பில் பெண் பிள்ளைகளின் நாணம் அகற்றும் நாடகத்தை வீடியோப் படப்பிடிப்பாளர்கள் செய்கின்றனர்.

இதுவே இன்றைய கலாசாரத்தின் மூல காரணம் எனலாம்.

சுருங்கக் கூறின் யாழ்ப்பாணத்துக் கலாசார சீரழிவில் வீடியோப் படப்பிடிப்பாளர்களின் பங்கு அதிகமானதென்பது மறுப்பதற்கில்லை.

பருவமடைந்த ஒரு பெண்பிள்ளையை அங்கு நட, இங்கு நட, அப்படி நட, இப்படி நட, சிரி, அழு, தலைவிரிகோலமாக நில் என வீடியோ பிடிக்கும் இளசுகள் சிம்மிசம் செய்து விடுகின்றனர்.

இந்த அசிங்கத்தை பெற்றோர்கள் என்று தடுத்து நிறுத்துகிறார்களோ அன்றுதான் யாழ்ப்பாணத்துக் கலாசாரம் மீட்சி பெறும்.

# மாகாணசபை தேர்தலில் வெற்றி பெறுவதற்கு வன்னியில் அப்பாவித் தமிழ் மக்கள் அழிக்கப்படுகின்றனர்

## இடதுசாரி முன்னணி குற்றச்சாட்டு

(கொழும்பு)

வன்னியைக் கைப்பற்றப்போவதாகக் கூறிக்கொண்டு அரசாங்கம் அப்பாவி தமிழ் மக்கள் மீது விமானக் குண்டுத் தாக்குதல்களையும் ஷெல் தாக்குதல்களையும் நடத்தி கொலை செய்வதை கடுமையாகக்கண்டிக்கின்றோம்.

தென்பகுதி சிங்கள மக்கள் மத்தியில் வன்னியைக் கைப்பற்றும் எதிர்பார்ப்பை ஏற்றபடுத்தி மாகாண சபை தேர்தல்களில் வெற்றி பெறவே தமிழ் மக்கள் அழிக்கப்படுகின்றனர் என்று இடது சாரி முன்னணி தெரிவித்துள்ளது.

முல்லைத்தீவில் விமானத்தாக்குதல் மற்றும் ஷெல் தாக்குதல்கள் தொடர்பாக கருத்துத்தெரிவிக்கையிலேயே இடது சாரி முன்னணியின் அமைப்புச் செயலாளரும் சப்பரகமுவ மாகாணசபை முதலாமைச்சர் வேட்பாளருமான சமில் ஜய நித்தி இவ்வாறு தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறியதாவது,

விடுதலைப்புலிகளுக்கு எதிரான தாக்குதல்களை நடத்திக் கொண்டு பிரதேசங்களைக் கைப்பற்றும் படையினர் பாரிய இழப்புக்களைச் சந்திக்கும் நிலை தோன்றியுள்ளது.

தமது கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்குள் நுழைய முனைந்தால் கடுமையான இழப்புக்களை சந்திக்க நேரிடும் என தெரிவிக்கும் புலிகள் தாக்கதல்களையும் நடத்தி வருகின்றனர்.

இந்த சூழ்நிலையில் அரசாங்கம் விமானத்தாக்குதல்களை நடத்துகிறது. புலிகளின் நிலைகள் மீது தாக்குதல் நடத்தப்படுவதாக அரசாங்க தரப்பினர் தெரிவிக்கின்றனர்.

ஆனால் சிறு குழந்தை இறந்துள்ள துடன் பலர் காயமடைந்துள்ளனர். முல்லைத்தீவு அரசாங்க அதிபரும் காயமடைந்துள்ளார்.

இவ்வாறான செயற்பாடுகள் சர்வதேச ரீதியில் புலிகளுக்கு சாதாகமான தன்மையை உருவாக்கும். யுத்தத்தாலோ தமிழ் மக்களை கொல்லுவதாலோ இனப் பிரச்சினைக்கு தீர்வு காண முடியாது.

எனவே சமாதானப் பேச்சு வார்த்தைகளை ஆரம்பித்து அரசியல் தீர்வைக்காண முயல வேண்டும். அதை விடுத்து தான் தோன்றித்தனமாக அரசு தீர்மானங்களை மேற்கொள்வது நாட்டில் பேரழிவை ஏற்படுத்தும்.

தமிழ் மக்கள் நசுக்கப்படும் சூழ்நிலையில் சப்ரகமுவ வடமத்திய மாகாண சபைத் தேர்தல்கள் நடக்கவுள்ளன. இதில் தமிழ் மக்களுக்காக உண்மையிலேயே குரல் கொடுப்பவர்களுக்கு தமிழ்ப்பேசும் மக்கள் வாக்களித்து அரசாங்கத்திற்கு தமது எதிர்ப்பைக்காட்டவேண்டும். (அ-6)

# வன்னி மக்களுக்கான மனிதாபிமான நடவடிக்கைகளுக்கு முன்னுரிமை வழங்குங்கள்

## சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பகம் கோரிக்கை

(கொழும்பு)

வன்னியில் மனிதாபிமான நடவடிக் கைகளுக்கு முன்னுரிமை வழங்குமாறு அரசாங்கத்திடமும் தமிழீழ விடுதலைப் புலிகளிடமும் நியூயோர்க்கைத் தள மாகக் கொண்ட சர்வதேச மனித உரிமை கள் கண்காணிப் பகம் கோரியுள்ளது.

கண்காணிப்பகத்தின் கொள்கை மற்றும் சட்ட அமைப்பு பணிப்பாளர் ஜேம்ஸ்ரோஸ் இது தொடர்பில் கருத்து ரைக்கையில் போர் நியதிகளை இரண்டு தரப்பும் கடைப்பிடிக்க வேண்டும் என கோரி யுள்ளார்.

வன்னியில் ஆயிரக்கணக்கான மக் கள் இடம்பெயர்வதையிட்டு சர்வதேச மன் னிப்புச் சபை கவனத்தில் கொண்டுள்ளது.

இந்நிலையில் வன்னியில் இடம் பெயர்ந் துள்ளவர்கள் தங்குமிடங்கள் இன்றி மரநிழல்களில் அடிப்படை வசதிகள் இன்றிக் கஸ்டப்படுவதாக ரோஸ் குறிப் பிட்டுள்ளார்.

இந்த மக்களுக்கு நிவாரணங்கள் கிடைக்கச் செய்வதற்கு இரண்டு தரப்பும் வழியேற்படுத்த வேண்டும் என்றும் சர்வ தேச மனித உரிமைகள் கண்காணிப் பகம் வேண்டுகோள் விடுத்துள்ளது. (அ-6)

# இந்திய சோதிடர்களின் ஆலோசனையின் பேரிலேயே தேர்தல் நடத்தப்படுகின்றது

வாக்குரிமையை பாதுகாக்க ஒன்றிணையுமாறு ஜே.வி.பி.கோரிக்கை

வடமத்திய, சப்ரகமுவ மாகாண சபைகளை கைப் பற்று வதற்காக அரச பயங்கரவாதம் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளது. எனவே நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தல் இடம் பெறுவ தென்பது பெரும் கேள்விக் குறியாக மாறியுள்ளது என்று ஜே. வி. பியின் பாராளுமன்றக்குழுத் தலைவர் அனுர குமார திஸா நாயக்க தெரிவித்தார்.

எனவே, வாக்குரிமையினைப் பாதுகாக்க சகலரும் ஒன் றிணைய வேண்டும். இந்திய சோதிடர்களின் ஆலோசனையின் பேரிலே வடமத்திய மற்றும் சப்ரகமுவ மாகாணங்கள் கலைக்கப்பட்டு தேர்தல் நடத்தப்படுகின்றது என்றும் அவர் கூறினார். கொழும்பு நிப்போன் ஹோட்டலில் ஜே.வி.பி ஏற்பாடு செய் திருந்த ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அனுர குமார திஸாநாயக்க எம்.பி. இதனைத் தெரிவித்தார். இங்கு அவர் தொடர்ந்து கூறுகையில் , .

இந்திய சோதிடர்களின் ஆலோசனையின் பேரிலேயே வடமத்திய மற்றும் சப்ரகமுவ மாகாண சபைகளை கலைத்து தேர் தலை அரசாங்கம் அறிவித்துள்ளது. இதனைக் கபடமாக வெற்றி கொள்ளும் நோக்கில் அரச அதிகாரங்களைப் பயன்படுத்துகின்ற அரசாங்கம் ஆயுதக் குழுக்களை வைத்துக் கொண்டுபயங்கர வாத செயற்பாடு களி லும் ஈடுபட்டு வருகின்றது.

எதிர்கட்சிகள் மீது வன்முறை களைக் கட்டவிழ்த்து விட்டிருக்கின்றது. வேட்பாளர்கள், ஆதரவாளர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்கின்றது . அலுவலகங்கள், உடமைகளுக்கு தேசம் விளைவிக்கப்படுகின்றது.

உண்மையில் அரச பயங்கரவா தம் அங்கு உச்ச நிலையை அடைந் திருக்கின்றது. நேர்மையான அரசாங் கமாக இருந்தால் அல்லது மக்கள் நம்பிக்கையைப் பெற்றுள்ள அரசாங்கமாக இருந்தால், ஏன் எதிர்க்கட்சிகளைக் கண்டு அஞ்ச வேண்டும்? அத்துடன் ஏன் எதிர்த்தரப்பு ஆதரவாளர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம், தாக்குதல்களை நடத்த வேண்டும் என அரசாங்கத்தைக் கேட்கின்றோம். தபால் மூல வாக்களிப்புக்கு குறித்த திணங்களை தேர்தல் திணைக்களம் அறிவித்திருந்த போதிலும், பொலனறுவையில் முதல் நாளிலேயே வாக்குப்பதிவுகள் இடம் பெற்றுள்ளன. இது குறித்து கேள்வி எழுப்பும் போதே குறித்த அரச அலுவலக ஊழியர்கள் சிலர் வெளிநாடு செல்ல வேண்டியிருந்ததாலேயே அவ்வாறு குறித்த தினத்திற்கு முதல் நாளில் தபால் மூலவாக்குப்பதிவு இடம்பெற நேர்ந்ததாக காரணம் கூறப்படுகின்றது. உண்மையில் இது ஏற்றுக் கொள்ளக் கூடிய விடயமல்ல வாக்குக்கொள்கையை அரசாங்கம் பொலனறுவையிலேயே ஆரம்பித்துவிட்டமைக்கு இது நல்ல உதாரணமாகும். (அ-6)

## படையினரும் பொலிஸாரும் இணைந்து கொட்டாஞ்சேனை வீடுகளில் தேடுதல்

(கொழும்பு)

கொட்டாஞ்சேனை வாசல வீதி யில் படையி னரும் பொலிஸாரும் இணைந்து நேற்று முன்தினம் பிற்பகல் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டனர். வாசல வீதியில் உள்ள வீடுகள் தொடர்மாடிகளுக்குள் சென்ற படையினரும் பொலிஸாரும் வீட்டில் உள்ளவர்களை விசாரித் ததுடன் அடையாளத்தை உறுதிப்படுத்தும் ஆவணங்களை யும் பரிசோதித்தனர்.

அறைகள், சமையலறை உட்பட வீடுகளின் சகல பகுதிகளுக்குள்ளும் சென்ற படையினரும் பொலி ஸாரும் அனைத்து பொருட்களையும் சோதனையிட்டனர்.

சில மணி நேரம் இந்த சோதனை நடவடிக்கை இடம் பெற்றது. வெளியிடங்களிலிருந்து வந்த பொலிஸாரும் படையினரும் இணைந்தே இந்தத் தேடுதலை நடத்தியதாகத் தெரிய வருகின்றது. (அ-6)

## தெரிந்த கதையும் தெரியாத அர்த்தமும் (75)

ஓலைச் சுவடி

### திருடித் தின்றால் விக்கல் உண்டாகுமா?

சமையற்கட்டிலிருந்து விக்கல் எடுத்துக் கொண்டு வரும் குழந்தையைப் பார்த்து பெரியவர்கள் ஏதோ திருடித் தின்று விட்டான் அதனால் விக்கல் உண்டானது என்பார்கள்.

அவர்கள் கூறுவது சரியே, திருடித் தின்றால் விக்கல் உண்டாகும். குழந்தைகள் தங்கள் வீட்டிலேயே தின்பண்டங்களை திருடிதின்னும் போது மிக அவசரமாகவே உண்பது வழக்கம். அவசரமாக உணவருந்தும் போது விக்கல் உண்டாவது இயற்கை விதி திருடித்தின்பதனால் அல்லாவிட்டாலும் திருடிய பொருளை அவசர மாகத் தின்பதால் விக்கல் உண்டாகும்.

மேலும் ஜீரணக் கோளாறுள்ள போதும் அதிகமாகச் சிரிக்கும் போதும் விக்கல் உண்டாவது வழக்கம். மனித உடலினுள்ளிருக்கும் உதரவிதானத்தில் அல்லது அதை நோக்கிச் செல்லும் நாடியில் ஏதாவது இடைஞ்சல் ஏற்படுமிடத்து விக்கல் வருகின்றது என்பது அறிவியல் கூறுவது. இதனால் உதர விதானம் சுருங்கு கின்றது.

இச் சுருகத்தைத் தவிர்க்க உள்நாக்கு அடைவதே விக்கலாக அனுபவப்படு கின்றது.

# முருங்கைக்கீரை சாப்பிட்டால் உயர் இரத்த அழுத்தம் குறையும், மலட்டுத்தன்மை நீங்கும்

முருங்கைக் கீரை சாப்பிட்டால், உயர் இரத்த அழுத்தம் குறையும் என்றும் மலட்டுத் தன்மை நீங்கும் என்றும் வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

**முருங்கைக். கீரை**

கீரை வகைகளில் அரைக்கீரை, முளைக்கீரை, தண்டுக்கீரை, பொன்னாங்கண்ணி கீரை, அகத்திக் கீரை உள்ளிட்ட கீரைகள் நம் அன்றாட சாப்பாட்டில் இடம்பெற வேண்டியவை ஆகும்.

**சத்து மிகுந்தது**

முருங்கை மரத்தை சாதாரணமாக பலர் நினைக்கிறார்கள். முருங்கை மரத்தின் இலை,பூ, காய், பிசின் ஆகிய அனைத்தும் மருத்துவ குணம் கொண்டவை.


முருங்கை கீரை (எடைக்கு எடை) சாப்பிட்டால் 4 டம்ளர் பாலில் உள்ள கல்சியம், 7 தோடம்பழங்களில் உள்ள விற்றமின் சி, 3 வாழைப்பழங்களில் உள்ள பொட்டாசியம், கீரையில் உள்ளது போன்ற 3மடங்கு இரும்புச்சத்து, கரட்டில் உள்ள 4 மடங்கு விற்றமின் ஏ, பாலில் உள்ள புரோட்டின் போல 2 மடங்கு ஆகியவை கிடைக்கிறது என்று அறிவியல் ஆய்வு கூறுகிறது.

**உயர் இரத்த அழுத்தம் குறைகிறது**

இத்தகைய சத்து நிறைந்த முருங்கைக் கீரையை வாரம் ஒரு முறையாவது சாப்பிட்டால் உயர் இரத்த அழுத்தம் உள்ளவர்களுக்கு இரத்த அழுத்தம் குறைந்து சீராகிறது.

அதுமட்டுமல்ல சர்க்கரை நோயாளிகளுக்கு இரத்தத்தில் உள்ள குளுக்கோஸ் அளவைக் குறைப்பதால் சர்க்கரை அளவைக் கட்டுப்பாட்டுடன் வைத்திருக்கிறது.

எனவே, எல்லோரும் வாரம் ஒரு நாளாவது முருங்கைக் கீரை சாப்பிட்டால் நல்ல ஆரோக்கியத்துடன் வாழலாம். இது ஏழை



களின் டொனிக் ஆக விளங்குகிறது. முருங்கைக் கீரையுடன் அதை விட2 மடங்கு அரிசி கலந்துவேக வைத்து, மிளகு,சீரகம்,மிளகாய் வற்றல்தூள், உப்பு ஆகி யவை சேர் த்து சற்று பாயாசம் போல தண்ணீ ராக வைத்து சாப்பிட்டால் சளிவெளி யேறும்.

**சாப்பிடும் முறை**

உயர் இரத்த அழுத்தம் உள்ள வர்கள் முற்றாத இளம் முருங்கை கீரையை பறித்து சிறிதளவு வறுத்து உப்பு போட்டு சாம்பார் வெங்காயம், சீரகம், பச்சைமிளகாய் சேர்த்து வேக வைத்து அதை பொரியலாக சாப்பிடலாம்.

ருசியாக சாப்பிட விரும்புபவர்கள். துவரம் பருப்பை வேகவைக் கும் போது சேர்த்துக்கொள்ளலாம்.

சர்க்கரை நோயாளிகள் மேலே சொன்னதை அப்படியே செய்து எண்ணெய் கொண்டு தாளித்து சாப்பிடலாம். நோய் அற்றவர்கள் முருங்கைக் கீரையில் தேங்காய் துருவல் சேர்த்துக்கொள்ளலாம். எந்தக் காரணம் கொண்டும் கீரையை வேகவைத்த தண்ணீரை வடிகட்டக்கூடாது. குறைந்த தண்ணீர் விட்டு வேகவைத்தால் போதும்.

முருங்கைக் கீரை மட்டுமல்ல எந்தக் கீரை சமையலிலும் ஒரு தக்காளி சேர்த்தால் மிகவும் சுவையாக இருக்கும்.

**மலட்டுத்தன்மை நீங்குகிறது**

முருங்கை கீரை சாப்பிட்டால் மூட்டு வலி உள்ளவர்களுக்கும் அரும்மருந்தாக விளங்குகிறது.

மேலும் முருங்கை பூ நிறையக் கிடைக்கும் பருவத்தில் முருங்கைப்பூவை வதக்கி பொரியலாக ஒரு வயது குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை சாப்பிடலாம்.

அதனால், உடம்பில் நல்ல வலிமை கிடைக்கும். ஆண்களுக்கு மலட்டுத்தன்மை நீங்கும்.வீரியம் அதிகரிக்கும். உயிர் அணுக்கள் எண்ணிக்கை அதிகரிக்கும்.

குடல் புழுக்களையும் போக்குகிறது. நீண்டநாள் கபம் போகும்.முருங்கை பூ நிறைய கிடைக்காவிட்டால் கிடைத்ததை எந்தப் பொரியலிலும் போடலாம் அல்லது எந்த குழம்பிலும் சேர்க்கலாம்.

முட்டையுடன் சேர்த்துப் பொரித்துச் சாப்பிடலாம். (சர்க்கரை நோய், உயர் இரத்த அழுத்தம் உள்ளவர்கள் முட்டை வெள்ளைக்கருவை மட்டும் பயன் படுத்தலாம்).

**முருங்கைக்காய்**


முருங்கைக்காயை சமைத்து சாப்பிட்டாலும் வீரியம் அதிகரிக்கும். உடலுக்கு நல்ல பலம் கிடைக்கும்.முருங்கை மரத்தில் இருந்து கிடைக்கும் பிசின் சாப்பிட்டாலும் ஆண்களுக்கும்,பெண்களுக்கும் மலட்டுத்தன்மை நீங்கும்.

இத்தகைய முருங்கை மரத்தை வீட்டின் அருகே இடம் உள்ளவர்கள் வளர்த்து பயன் அடையுங்கள்.

எனவே.முருங்கை இலைகளை சாதாரணமாக எண்ணாமல் அதை விற்றமின் , டொனிக் ஆக நினைத்துப் பயன்படுத்தி நோய் இன்றி வாழலாம்.




# ஆகா... அப்பிள்



தினம் ஒரு அப்பிள் சாப்பிட்டால் மருத்துவ மனைக்குச்செல்ல வேண்டிய தேவை இருக்காது என்று ஒரு பழமொழி கூறப்படுவதுண்டு.



அப்பிளுக்கு மருத்துவ குணங்கள் அதிகம் இருப்பதே இதற்குக் காரணம். இதய இரத்த குழாய் அடைப்புகள் வராமல் தடுக்கும் குணம் அப்பிள்களுக்கு உண்டு என்பதை புதிய ஆய்வின் மூலம் கண்டறிந்துள்ளனர்.

அப்பிளை அப்படியே கடித்துச் சாப்பிடுவதை விட, அதனை ஜூஸ் பிழிந்து சாப்பிடுவதால் , அதன் மருத்துவ குணங்கள் அதிகரிக்கிறது.

இதயத்தில் உள்ள இரத்தக் குழாய்களில் அடைப்புகள் ஏற்படாமல் பாதுகாக்க, எதிர் ஒக்சிஜனேற்றிகள் என்னும் வேதிப்பொருட்கள் அவசியம்.

அப்பிளை சாறுபிழிந்து சாப்பிடுவதால், எதிர் ஒக்சிஜனேற்றிகளின் செயல்பாடு அதிகரிக்கும் என்பதே இதற்குக் காரணம். திராட்சையிலும் எதிர் ஒக்சிஜனேற்றிகள் அதிக அளவு உள்ளன.

எனவே அப்பிளுடன் சேர்த்து திராட்சை சாப்பிடுவது இரத்த குழாய்கள் சிறப்பாக இயங்க உதவி செய்யும்.


# கொழுப்பு அவசியம்!



உடல்பருமன் வராமல் தவிர்க்கிறேன் என்று கூறிக் கொண்டு, கொழுப்பு இல்லா, உணவுகளையும் நார்ச்சத்து அதிகம் உள்ள உணவுகளையும் தொடர்ந்து சாப்பிட்டு வந்தால், ஆபத்தான விளை வுகள் ஏற்படும் என்று மருத்துவர்கள் எச்சரித்துள்ளனர்.அதிக நார்ச்சத்து மற்றும் குறைவான கொழுப்பு அடங்கிய உணவுப் பொருட் களால் விற்றமின் பற்றாக்குறை ஏற்படுவ தோடு, குழந்தைக்கு வளர்ச்சி குறைபாடும் ஏற்படும்.

துரித உணவுகளை சாப்பிட்டு விட்டு, பால் பொருட்கள், மாமிசம், முட்டை, மீன் போன்ற சத்தான உணவுகளை தவிர்ப்பது உடல் நலக் குறைபாடுகளுக்கு வழிவகுக் கும்.

இதனை தவிர்க்க ஓரளவிற்கு கொழுப்பு அடங்கிய உணவுப் பொருட்களை சாப்பிடுவதை வழக்கமாக்கி கொள்ள வேண்டும். பால்பொருட்கள், மீன் போன்ற சத்தான உணவுக்களையும் சாப்பிட வேண்டும். தற்காலங்க ளில் பெற் றோ ர்கள்



தங்களது குழந்தைகள் உடல் பருமனால் பாதிக்கப்படக் கூடாது என்று சிறுவயது முதல் உணவுக் கட்டுப்பாடுகளை விதிக்கின்றனர்.

இதனால் விற்றமின் குறைபாடுகளால் குழந்தைகள் பாதிக்கப்பட வாய்ப்பு உண்டு. எனவே கொழுப்புக் கலந்த உணவுகளை சரியான விகிதத்தில் அளிப்பது நல்லது என மருத்துவர்கள் கூறியுள்ளனர்.

# நெல்லிக்காய்

பாரம்பரிய மருத்துவமான சித்த மருத்துவத்தில் சிகிச்சை இரண்டு வகையாக பிரிக்கப்படுகிறது.

முதலாவது நோய் அணுகாமல் ஆரோக்கியத்தை மேம்படுத்திக்கொள்வது, இரண்டாவது நோய் ஏற்பட்ட நேரத்தில் சிகிச்சையளித்து நோயை குணப்படுத்துவது.


இதில் முதலாவதான ஆரோக்கியத்தை மேம்படுத்தும் சிகிச்சை காயகற்பம் என அழைக்கப்படுகிறது. காயம் என்றால் உடல் கற்பம் என்றால் அழிவில்லாதது.

நரை திரை மூப்பு அணுகாமல் என்றும் நோயணுகாமல் இளமையாக வைத்திருக்க உதவும் மூலிகைகளை காயகற்ப மூலிகை என்கிறோம். காயகற்ப மூலிகைகளில் மிக முக்கியமான இடத்தைப்பிடிப்பது நெல்லிக்காய்.

மன்னன் அதியமான் ஔவைப் பாட்டிக்கு நீண்ட ஆயுள் அமையும் பொருட்டு நெல்லிக்கனி கொடுத்ததாக சங்க இலக்கியங்களில் சொல்லப்படுகிறது.

நெல்லிக்காய் நம் உடலில் தோன்றும் நஞ்சுகளை வெளியேற்றி இளமையாக இருக்க வழி செய்கிறது.உடல் திசுக்களுக்கு புத்துணர்ச்சியளித்து உடல் கலங்களை நன்கு செயற்பட உதவிபுரிகிறது.

நெல்லிகாயில் விற்றமின் சி வேறு எந்த வகை காய்கறி பழங்களிலும் இல்லாத அளவுக்கு600 மில்லிகிராம் உள்ளது கல்சியம்-50 மில்லிகிராம், பொஸ்பரஸ் -20 மில்லி



கிராம் இரும்புச் சத்து 1.2மில்லிகிராம் உள்ளது. அப்பிள் பழத்தை விட இது அதிக சக்தி வாய்ந்தது.

நெல்லிக்காய் ஈரலைத் தூண்டி நன்கு செயல்பட வைத்து கழிவுகளை வெளியேற்ற உதவுகிறது.

**நெல்லிக்காய் தயிர் பச்சடி செய்யும் முறையைப் பார்க்கலாம்**

நெல்லிக்காய் -6

பச்சை மிளகாய்-1

தேங்காய்-1 மேசைக்கரண்டி

தயிர்-1கப்

கொத்தமல்லி தழை-1கைப்பிடி (பொடியாக அரிந்து கொள்ளவும்).

கடுகு-1/2 தேக்கரண்டி

நல்லெண்ணை-1/2 தேக்கரண்டி

உப்பு- தேவையான அளவு.

*செய்முறை*

நெல்லிக்காயை வேக வைத்து கொட்டை நீக்கி சதைப் பகுதியை மசித்துக் கொள்ளவும். தேங்காய், பச்சை மிளகாய் இரண்டையும் அரைத்து தயிருடன் உப்பு கொத்தமல்லி தழை கலந்து கடுகு தாளித்துபரிமாறவும்.

நீரிழிவு நோயாளிகள் இதை வாரம் இரு முறை கட்டாயம் செய்து சாப்பிடலாம். பித்தம் காரணமாக உண்டாகும் நோய்களுக்கும் சிறந்தது.ஜீரண சக்தியை அதிகரித்து தாதுக்களை நம் உடல் ஏற்றுக் கொள்ள துணை புரிகிறது கண்களுக்கு தெளிவை கொடுக்கிறது தலை முடி உதிராமல் வளர்ந்து நரைமுடி தோன்று வதை தவிர்க்கிறது.

நரம்பு மண்டலத்தை தூண்டி வேலை செய்கிறது. மூளை செல்களுக்கு புத்துணர்ச்சியளிப்பதால் மனத் தெளிவு,புத்திக் கூர்மை மற்றும் ஞாபகசக்தி உண்டாகிறது.

நுரையீரலை பலப்படுத்தி சுவாச நோய்களை கட்டுப்படுத்த உதவுகிறது.உடல் எடையை கூட்டாமல் தசைகளுக்கு பலம் அளிக்கக் கூடிய தன்மை நெல்லிக்காய்க்கு உண்டு.

நீரிழிவை கட்டுப்படுத்தும் சக்தியுள்ளது மேலும் இதில் விற்றமின் சத்து அதிகம் உள்ளதால் நோய்க்கு எதிர்ப்பு சக்தியாக செயல்படுகிறது.

எல்லா வயதினரும் இதை சாப்பிட வேண்டும் குழந்தைகளுக்குநெல்லிக்காய் லேகியம் தினம் கொடுக்க சிறந்த நோய் எதிர்ப்பு சக்தி உருவாவதுடன் மூளை வளர்ச்சியும் புத்திக்கூர்மையும் ஏற்படும். ஆயுர்வேத சக்தி மருந்து நெல்லிக்காயால் தான் தயார் செய்யப்படுகிறது.

**நெல்லி ஜீரா**

நெ[illegible]க்காய் -1/2கிலோ

தே[illegible]-1கிலோ

படிகாரம்-1/2

*செய்முறை*

நெல்லிக்காயை முள் கரண்டியால் குத்தி படிகாரம் கலந்த நீரில் ஒரு இரவு ஊற வைக்க வேண்டும். பின் அதை வேக வைத்து நீரை வடி கட்டி நிழலில் உலர்த்தி,ஈரப்பதம் நீங்கிய உடன் தேனில் கலந்து வைத்துக் கொள்ள வேண்டும். 4நாட்கள் உலர்ந்த பின் பயன்படுத்தலாம் .

தினம் காலை மாலை இரண்டு நெல்லிக்காய் சாப்பிட்டு வர உடலுக்கு மிகுந்த எதிர்ப்பு சக்தி உண்டாகும்.

# மூன்றாவது டெஸ்டில் வெற்றி பெற்று இலங்கை தொடரைக் கைப்பற்றியது

(கொழும்பு)

மூன்றாவது டெஸ்டில் இலங்கை அணி 8 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று தொடரை 2:1 என்ற கணக்கில் கைப்பற்றியது.

இரண்டாவது இன்னிங்ஸில் போராடிய இந்திய அணி சோகத்துடன் தொடரை இழந்தது. இலங்கைக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள இந்திய அணி 3 டெஸ்ட், 5 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகின்றது.

இதில் முதலாவது டெஸ்டில் இலங்கை அணியும் இரண்டாவது டெஸ்டில் இந்திய அணியும் வெற்றி பெற்று தொடரில் 1:1 என்ற கணக்கில் சமநிலையில் இருந்த நிலையில் மூன்றாவதும் இறுதியுமான தீர்க்கமான டெஸ்ட் கடந்த 8 ஆம் திகதி கொழும்பு பி.சரவணமுத்து மைதானத்தில் ஆரம்பமானது.

இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி அதன் முதலாவது இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 249 ஓட்டங்களை எடுத்தது.

இதில் காம்பீர் 72 ஓட்டங்களையும் கங்குலி 35 ஓட்டங்களையும் மற்றும் சகீர்கான் 32 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் அஜந்த மெண்டிஸ் 5 விக்கெட்டுக்களையும் தம்மிக்க பிரசாத் 3 விக்கெட்டுக்களையும் மற்றும் முரளிதரன் 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு தனது முதலாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 396 ஓட்டங்களை எடுத்து சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

இதில் குமார் சங்கக்கார 144 ஓட்டங்களையும் பிரசன்ன ஜெயவர்த்தன 49 ஓட்டங்களையும் மற்றும் சமிந்த வாஸ் 47 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் சகீர்கான், ஹர்பஜன் சிங் மற்றும் கும்ளே ஆகியோர் தலா



3 விக்கெட்டுக்களையும் இஷாந்த் சர்மா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

தொடர்ந்து முதலாவது இன்னிங்ஸில் 147 ஓட்டங்கள் வித்தியாசத்தில் பின்னிலையில் இருந்த இந்திய அணி தனது இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடி நேற்று முன்தினம் மூன்றாம் நாள் ஆட்டநேர முடிபில் 5 விக்கெட்டுக்களை இழந்து 161 ஓட்டங்களை எடுத்திருந்தது.

நான்காம் நாளான நேற்று தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய இந்திய அணிக்கு ராவிட், லக்ஸ்மன் ஜோடி பொறுப்புடன் ஆடி நம்பிக்கையளித்தனர்.

நீண்ட இடைவெளிக்குப் பின் சிறப்பாக ஆடிய ராவிட் தனது 52-வது டெஸ்ட் அரைச்சதத்தை பூர்த்தி செய்தார்.

இந்த ஜோடி இணைப்பாட்டமாக 85 ஓட்டங்களைப் பெற இந்திய அணி 216 ஓட்டங்களைப் பெற்றபோது சிறப்பாக ஆடிய ராகுல் ராவிட் 68 ஓட்டங்களுடன் மெண்டிஸின் பந்துவீச்சில் மஹேல ஜெயவர்த்தனவுடன் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து களமிறங்கிய கும்ளே நிதானமாக ஆட, மறுமுனையில் காயத்துடனும் பொறுப்புடன் ஆடிய வி.வி.எஸ்.லக்ஸ்மன் தனது 37-வது டெஸ்ட் அரைச்சதத்தைக் கடந்தார்.

எனினும் மறுமுனையில் அணித்தலைவர் கும்ளே 9 ஓட்டங்களை மாத்திரம் எடுத்த நிலையில் முரளிதரனின் பந்துவீச்சில் எல்.பி.டபிள்யூ முறையில் ஆட்டமிழந்தார்.

இவ் ஆட்டமிழப்பை ஏற்க மறுத்த அணித்தலைவர் கும்ளே மூன்றாவது நடுவரிடம் மேல் முறையீடு செய்தபோதும் அது பலனளிக்கவில்லை.

அடுத்துக் களமிறங்கிய ஹர்பஜன் சிங் அதிரடியாக ஆடி ஓட்டங்களைக் குவித்து அசத்தினார்.

எனினும் ஹர்பஜன் சிங் 26 ஓட்டங்களை எடுத்த நிலையில் சமிந்த வாஸின் பந்துவீச்சில் எல்.பி.டபிள்யூ முறையில் ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து களமிறங்கிய சகீர்கான், இஷாந்த் சர்மா ஆகியோர் ஓட்டமெதனையும் எடுக்காமல் ஆட்டமிழக்க இந்திய அணி இரண்டாவது இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 268 ஓட்டங்களை எடுத்தது.

இதன் மூலம் இலங்கை அணிக்கு வெற்றி இலக்காக 122 ஓட்டங்கள் நிர்ணயிக்கப்பட்டது. இதில் ஆட்டமிழக்காமல் வி.வி.எஸ்.லக்ஸ்மன் 61 ஓட்டங்களை எடுத்தார்.

பந்துவீச்சில் முரளிதரன், மெண்டிஸ் ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்களையும் பிரசாத் 2 விக்கெட்டுக்களையும் சமிந்தவாஸ் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

தொடர்ந்து வெற்றி இலக்காக 122 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு தனது இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாட களமிறங்கிய இலங்கை அணிக்கு ஆரம்பமே அதிர்ச்சியளித்தது.

ஆரம்பத் துடுப்பாட்ட வீரரான வான்டொட் 9 ஓட்டங்களுடன், குமார் சங்கக்கார 4 ஓட்டங்களுடன் அடுத்தடுத்து ஆட்டமிழக்க இலங்கை அணி 22 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களை இழந்தது.

எனினும் 3-வது விக்கெட்டுக்காக ஜோடி சேர்ந்த வர்ணபுர, மஹேல ஜெயவர்த்தன ஜோடி பொறுப்புடன் துடுப்பெடுத்தாடி இலங்கை அணியை வெற்றிக்கு அழைத்துச் சென்றனர்.

இந்த ஜோடி 101 ஓட்டங்களை இணைப்பாட்டமாக எடுக்க இலங்கை அணி 2-வது இன்னிங்ஸில் 33.1 ஓவர்களில் 2 விக்கெட்டுக்களை மாத்திரமிழந்து 123 ஓட்டங்களை எடுத்து 8 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றி



தொடர் நாயகன் விருது பெற்ற மெண்டிஸை அவரின் தாயார் கட்டியணைத்து ஆனந்தம் அடையும்போது...

பெற்றது. இதன் மூலம் 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை இலங்கை அணி 2:1 என்ற கணக்கில் கைப்பற்றியது.

துடுப்பாட்டத்தில் வர்ணபுர 54 ஓட்டங்களையும் அணித்தலைவர் மஹேல ஜெயவர்த்தன 50 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் எடுத்தனர். பந்துவீச்சில் சகீர்கான், ஹர்பஜன் சிங் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர்.

இப்போட்டியின் நாயகனாக முதலாவது இன்னிங்ஸில் 144 ஓட்டங்களை எடுத்து இலங்கை அணியின் வெற்றிக்கு வழியமைத்த குமார் சங்கக்கார தெரிவானதுடன் தொடரின் நாயகன் விருதை தனது கன்னி டெஸ்ட் தொடரில் சிறப்பாக பந்துவீசி 26 விக்கெட்டுக்களை வீழ்த்தி அசத்திய அஜந்த மெண்டிஸ் தட்டிச் சென்றார். (5)

## பதக்கப் பட்டியல்

| நாடு | தங்கம் | வெள்ளி | வெண்கலம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| சீனா | 9 | 3 | 2 | 14 |
| அமெரிக்கா | 3 | 4 | 5 | 12 |
| தென்கொரியா | 4 | 4 | - | 8 |
| இத்தாலி | 3 | 3 | 2 | 8 |
| அவுஸ்திரேலியா | 2 | - | 3 | 5 |
| ஜப்பான் | 2 | - | 2 | 4 |
| பிரித்தானியா | 2 | - | 1 | 3 |
| செக்குடியரசு | 2 | - | - | 2 |
| நெதர்லாந்து | 1 | 1 | 1 | 3 |
| ஸ்பெயின் | 1 | - | 1 | 2 |
| பின்லாந்து | 1 | - | 1 | 2 |
| அஜர்பைஜான் | 1 | - | - | 1 |
| இந்தியா | 1 | - | - | 1 |
| ரோமேனியா | 1 | - | - | 1 |
| தாய்லாந்து | 1 | - | - | 1 |
| ரஷ்யா | - | 4 | 2 | 6 |
| பிரான்ஸ் | - | 3 | 2 | 5 |
| வடகொரியா | - | 1 | 3 | 4 |
| கியூபா | - | 1 | 1 | 2 |
| ஜேர்மனி | - | 1 | 1 | 2 |
| ஆஸ்திரியா | - | 1 | - | 1 |
| கொலம்பியா | - | 1 | - | 1 |
| ஹங்கேரி | - | 1 | - | 1 |
| நோர்வே | - | 1 | - | 1 |
| ஸ்லோவோக்கியா | - | 1 | - | 1 |
| சுவீடன் | - | 1 | - | 1 |
| துருக்கி | - | 1 | - | 1 |
| வியட்நாம் | - | 1 | - | 1 |
| சிம்பாவே | - | 1 | - | 1 |
| பிரேஸில் | - | - | 2 | 2 |
| இந்தோனேசியா | - | - | 2 | 2 |
| அல்ஜீரியா | - | - | 1 | 1 |
| ஆர்ஜென்டினா | - | - | 1 | 1 |
| பெலாரஸ் | - | - | 1 | 1 |
| குரோஷியா | - | - | 1 | 1 |
| ஜோர்ஜியா | - | - | 1 | 1 |
| சுவிட்சர்லாந்து | - | - | 1 | 1 |
| சீனா தாய்வான் | - | - | 1 | 1 |
| உஸ்பெகிஸ்தான் | - | - | 1 | 1 |
| தஜகிஸ்தான் | - | - | 1 | 1 |

## இந்திய வீரர் அபிநவ் பிந்த்ரா தங்கம் வென்று சாதனை படைத்தார்



ஒலிம்பிக்கில் நேற்று நடந்த ஆண்களுக்கான 10 மீற்றர் துப்பாக்கி சுடுதல் (ஏர் ரைபிள்) இறுதிப் போட்டியில் இந்தியாவின் அபிநவ் பிந்த்ரா தங்கம் வென்றார்.

தனிநபர் போட்டியில் இந்தியா தங்கம் பெறுவது இதுவே முதல் முறை என்பது குறிப்பிடத்தக்கது. அபிநவ் பிந்த்ரா மூலம் இந்தியா வரலாறு படைத்துள்ளது. இதன் மூலம் பீஜிங் ஒலிம்பிக்கில் முதல் தங்கம் வென்ற இந்தியர் என்ற பெருமை பெற்றார். இந்த வெற்றியின் மூலம் இந்தியா பதக்கப்பட்டியலில் இடம்பிடித்தது.

சீனாவின் கியூனான் சூ வெள்ளிப் பதக்கமும் பின்லாந்தின் ஹென்றி ஹாக்கினன் வெண்கலப் பதக்கமும் பெற்றனர். பிந்த்ரா 700.5 புள்ளிகள் எடுத்து சாதனை நிகழ்த்தியுள்ளார். கேல்ரத்னா விருது பெற்ற பிந்த்ரா 2002 ஆம் ஆண்டு காமென் வெல்த் போட்டியில் தங்கம் வென்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

## இரண்டாவது தங்கம் வென்றார் அமெரிக்க வீரர் மைக்கெல் பெல்ப்ஸ்



அமெரிக்க சாதனை நீச்சல் வீரர் மைக்கெல் பெல்ப்ஸ் 2-வது தங்கப்பதக்கத்தை வென்றுள்ளார். நேற்று நடைபெற்ற 400 மீற்றர் பிரிஸ்டைல் ரிலே போட்டியில் அவர் தங்கப்பதக்கத்தை வென்றார்.

அமெரிக்க நீச்சல் வீரரான மைக்கெல் பெல்ப்ஸ் இந்த ஒலிம்பிக் போட்டிகளில் 8 தங்கப்பதக்கத்தை வெல்ல வேண் டும் என்று இலக்கு நிர்ணயித்துள்ளார். நேற்று முன்தினம் நடைபெற்ற 400 மீற்றர் தனிநபர் மெட்லி பிரிவில் அவர் தனது முதல் தங்கப்பதக்கத்தை வென்றார்.

இந்நிலையில் நேற்று நடைபெற்ற 400 மீற்றர் பிரிஸ்டைல் ரிலே போட்டியில் அமெரிக்க அணியில் அவர் இடம்பெற்றிருந்தார். இந்த பிரிவில் அமெரிக்க அணி முதலாவதாக வந்து தங்கப்பதக்கத்தை தட்டிச் சென்றது.

இதன் மூலம் பெல்ப்ஸ் 2-வது தங்கப்பதக்கத்தை வென்றுள்ளார். இந்த போட்டியில்அமெரிக்க அணிக்கு பிரான்ஸ் அணி கடும் சவாலாக விளங்கியது. இறுதியில் அமெரிக்கா3:08:24 நொடிகளில் தங்கத்தை வென்றது. பிரான்ஸ் அணி வெள்ளிப் பதக்கம் வென்றது. அவுஸ்திரேலிய அணி வெண்கலப் பதக்கம் வென்றது.

## சின்தன விதானகே முன்னணியில்



பீஜிங் ஒலிம்பிக் போட்டியில் இலங்கையின் பளு தூக்கும் வீரர் சின்தன விதானகே 69 கிலோ எடைப்பிரிவில் நடைபெற்ற கிளின் அன்ட் ஜார்க் சி பிரிவு போட்டியில் மொத்தமாக 293 கிலோ பாரத்தை தூக்கி முதலிடத்தைப் பெற்றார்.இதில் அவர் ஸ்னட்ச் முறையில் 128 கிலோ பாரத்தை தூக்கியதோடு கிளீன் அன் ஜார்க் முறையில் 165 கிலோ பாரத்தை தூக்கினார்.

கனடாவின் ஸ்ரீரினியர் பிரான்ஸிசும் மொத்தமாக 293 கிலோ பாரத்தைத் தூக்கினார். 69 கிலோ எடைப்பிரிவில் பதக்கத்துக்கான இறுதிச் சுற்றுப்போட்டி இன்று நடைபெறவுள்ளன.




## ஜப்பான் வீரர் உலக சாதனை

பாலா

உலகின் மிகப் பெரிய விளையாட்டுத் திருவிழாவான ஒலிம்பிக் போட்டி சீனத் தலைநகர் பீஜிங்கில் நடைபெற்று வருகிறது.

மூன்றாவது நாளான நேற்று நீச்சல் போட்டிகள் நடந்தது. ஆண்களுக்கான 100 மீற்றர் பிரஸ்டிரோக் நீச்சலில் ஜப்பான் வீரர் கிடாஜிமா 58.91 விநாடியில் தூரத்தைக் கடந்து புதிய உலக சாதனை படைத்து தங்கப் பதக்கம் பெற்றார்.

2006 ஆம் ஆண்டு அமெரிக்க வீரர் பிரண்டன் ஹான்சன் 59.13 விநாடிகளில் கடந்ததே உலக சாதனையாக இருந்தது. நோர்வே வீரர் அலெக்சாண்டர் டாவோ 59.20 விநாடியில் கடந்து வெள்ளிப் பதக்கமும் பிரான்ஸ் வீரர் குபாஸ்க் 59.37 விநாடியில் கடந்து வெண்கலப் பதக்கமும் பெற்றனர்.

# முப்பரிமாணத் திட்ட அணுகுமுறையில் பிரச்சினையைத் தீர்க்க அரசு யோசனை

## அமைச்சர் சம்பிக்க ரணவக்க தகவல்

(கொழும்பு)

இலங்கையின் இனப்பிரச்சினையை முப்பரிமாணத் திட்ட அணுகுமுறையினூடாகத் தீர்ப்பதற்கே இலங்கை அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருப்பதாக சுற்றாடல் வளத்துறை அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

படைவலுவைக் குறைத்தல், ஜனநாயகப்படுத்தல், அபிவிருத்தி போன்ற முப்பரிமாண திட்ட அணுகுமுறையினூடாகவே இனப்பிரச்சினையைத் தீர்க்க அரசாங்கம் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது.

அரசியல் ரீதியான தீர்வென்பது பழைமை வாய்ந்த முறை. வெளிநாட்டுத் தூதரக அலுவலகங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள், சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் மேலத்தேய நாடுகளிலேயே அரசியல் ரீதியான தீர்வென்ற பதம் தற்பொழுதும் பாவனையிலிருப்பதாகக் கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு வழங்கியிருக்கும் பிரத்தியேக செவ்வியில் அவர் குறிப்பிட்டிருந்தார்.

அரசாங்கத்தின் இந்த அணுகுமுறை கிழக்கு மாகாணத்தில் வெற்றிகரமாக நிரூபிக்கப்பட்டுள்ளது. கிழக்கு மாகாணத்தை இராணுவ ரீதியாக வென்றுள்ள அரசாங்கம் கிழக்கு மாகாணத்தின் அபிவிருத்திக்காகவும் மக்களின் நன்மைக்காகவும் உட்கட்டுமான வசதிகள் புனரமைக்கப்பட்டு வருவதாகவும் கிழக்கு மாகாணத்தை அரசாங்கம் வளர்ச்சிப் படியின் இயந்திரமாகக் கொண்டுள்ளது எனவும் சுற்றாடல் வளத்துறை அமைச்சர் கூறினார்.

இவ்வாறே அரசாங்கத்தின் முப்பரிமாணத் திட்ட அணுகுமுறையின் மூலம் இனப்பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் என நாங்கள் கூறுகின்றோம். இந்த அணுகுமுறை மூலம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தமிழீழக் கனவோ அல்லது முஸ்லிம்களின் கனவோ நிறைவேறாது.

இதனால்தான் இனப்பிரச்சினைக்கு அரசியல் ரீதியான தீர்வு பொருத்தமற்றது என நாங்கள் கூறுகின்றோம். சிங்கள மக்களின் உரிமைகளுக்காக அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும் என்ற எந்த அழுத்தங்களுக்கும் அரசாங்கம் உள்ளாகவில்லை.

மோதல்கள் இடம்பெறும்போது வன்முறைகள் இடம்பெறுவது சகஜமானது எனவும் கூறியுள்ளார். இதேவேளை 13-வது திருத்தச் சட்டமூலத்தை முழுமையாக அமுல்படுத்தி அதனூடாக மாகாண சபைகளுக்கு அதிகாரங்களைப் பகிர்ந்தளித்தால் அரசாங்கத்தை விட்டு, ஜாதிக ஹெலஉறுமய வெளியேறிவிடும் என அமைச்சர் சம்பிக்க ரணவக்க தனது செவ்வியில் தெரிவித்துள்ளார்.

சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவில் அங்கம் வகிக்கும் சிலர் தமது சொந்த யோசனைகளை உள்ளடக்கிய தீர்வுத் திட்டத்தை வெளியிடுவதற்கு முயற்சிக்கின்றார்கள். 13-வது திருத்தச் சட்டமூலத்தை சட்டத்தின் ஒரு பகுதியாகவே அமுல்படுத்த நாம் இணங்கியுள்ளோம் என்றார். (ச-5)

# பூநகரி நோக்கி ஷெல் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண நகரப் பகுதியிலிருந்து படையினர் நேற்று முன்தினம் மாலை 6 மணியில் இருந்து தொடர்ச்சியாக விடுதலைப் புலிகளின் பூநகரிப் பிரதேசம் மீது எறிகணைத் தாக்குதல்களை நடத்தியுள்ளனர். இதன் காரணமாக யாழ்ப்பாண நகரப் பகுதி அதிர்ந்த வண்ணம் இருந்தது.

இதேவேளை குண்டுச் சத்தங்களால் கொழும்புத்துறை, பாசையூர் மற்றும் அரியாலை ஆகிய இடங்களின் மக்கள் பீதியடைந்திருந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

# கல்முனை இளைஞன் சுட்டுக்கொலை

(மட்டக்களப்பு)

கல்முனையைச் சேர்ந்த தமிழ் இளைஞன் ஒருவர் காத்தான்குடியில் சுட்டுக்கொலை செய்யப்பட்டுள்ளார். இச் சம்பவம் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றுள்ளது.

கல்முனையைச் சேர்ந்த நடராஜா சதீஸ் (வயது-23) என்பவரே சுடப்பட்டவர் ஆவார். காத்தான்குடி ச்ர்லியா வீதிச் சந்தியில் வைத்து அவருக்குத் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. (ச-5)

## ரணில் விக்கிரமசிங்கவே...

எரிபொருள் விலைகளை அதிகரிக்கும் இலங்கை அரசாங்கம் விலை குறையும் போது விலைகளைக் குறைப்பதில்லை என நேற்று கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கூறினார்.

எரிபொருள்களின் விலைகளைக் குறைக்காமல் அரசாங்கம் திட்டமிட்டு மக்களிடம் கொள்ளையடிப்பதாக அவர் குற்றஞ்சாட்டினார். ஆடம்பரமாக நடைபெற்று முடிபடைந்திருக்கும் 15-வது சார்க் உச்சி மாநாட்டிற்கு 5 ஆயிரத்து 900 மில்லியன் இந்திய ரூபாய்கள் செலவு செய்யப்பட்டுள்ளபோதும் அதனால் இலங்கைக்கு ஒரு ரூபாய் கூட இலாபம் கிடைக்கவில்லை.

பயங்கரவாத ஒழிப்புத் தொடர்பாக சார்க் மாநாட்டில் முக்கியம் கொடுக்கப்பட்டதாகக் கூறப்பட்டது. எனினும் இலங்கையில் இடம்பெறும் பயங்கரவாதத் தாக்குதல் குறித்து ஏனைய நாட்டுத் தலைவர்கள் எவரும் கருத்துத் தெரிவிக்கவில்லை.

இலங்கையில் இடம்பெறும் பயங்கரவாதத்தைக் கண்டித்தோ அல்லது பாராட்டியோ எவரும் பேசவில்லை. இலங்கையில் இடம்பெறும் பயங்கரவாதத்தை ஏனைய நாடுகள் கவனத்தில் கொள்ளவில்லை என்பது இதன் மூலம் புலனாகிறது என அவர் கூறினார்.

நாட்டின் அடுத்த தலைவர் என்பதால் சார்க் மாநாட்டில் எவ்வாறு மக்கள் பணம் செலவு செய்யப்படுகின்றது என்பதைப் பார்ப்பதற்காகவே தமது தலைவர் ரணில் விக்கிரமசிங்க சார்க் உச்சி மாநாட்டிற்குச் சென்றிருந்தார்.

சார்க் தலைவர்களை அங்கு சந்திப்பதும் மற்றுமொரு நோக்கம் எனவும் ரவி கருணாநாயக்க குறிப்பிட்டார். (ச-5)

# விஞ்ஞான பாடப் பயிற்சி தொடர்பில் இரு நாள் பயிற்சி வேலைத் திட்டம்

தேசிய கல்வி நிறுவகத்தின் விஞ்ஞானம், சுகாதாரம் மற்றும் உடற்கல்விக்குமான பிரிவினால் 2008 ஆம் வருடத்திற்கான பாடத் திட்டம் பற்றிய தரம் 8 வகுப்பிற்கான விஞ்ஞானப் பாடப் பயிற்சி சம்பந்தமான குழு நாள் பயிற்சி வேலைத் திட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஆசிரிய ஆலோசகர்கள் மற்றும் பாடப் பணிப்பாளர்களுக்காக இரு நாள் அமர்வாக நடைபெறும் இவ் வேலைத் திட்டம் தமிழ், சிங்கள மொழிகளில் தனித்தனியாக நடத்தப்படுகின்றது.

தமிழ்மொழி மூலமான அமர்வு எதிர்வரும் 29 ஆம், 30 ஆம் திகதிகளில் திருகோணமலையிலும் ஏனைய மாகாணத்திற்கான அமர்வு எதிர்வரும் 13, 14 ஆம் திகதிகளில் தேசிய கல்வி நிறுவகத்திலும் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

வரும் 20,21 ஆம் திகதிகளில் சிங்கள மூல அமர்வு நடைபெறவுள்ளதுடன் அமர்வில் கலந்து கொள்பவர்களுக்குத் தேசிய கல்வி நிறுவகத்தால் அனுமதிக்கப்பட்ட கொடுப்பனவு வழங்கப்படும் எனவும் அழைப்புக் கடிதம் அனுப்பப்பட்டுள்ளவர்கள் வலயக் கல்விப் பணிப்பாளரால் அனுமதிக்கப்பட்ட அனுமதிக் கடிதத்துடன் வருகை தருமாறு கேட்கப்பட்டுள்ளனர். (ச-5)

## யாழ்ப்பாணத்...

தற்போது சேவ் த சில்ட்ரன் அமைப்பினூடாக உதவிகளை பெறுவதற்காக வரும் சிறுவர்களுக்கு மாற்று வழிமுறைகளூடாக உதவுவதற்கான முன்மொழிவுகள் செய்யப்பட்டிருப்பதாகத் தகவல்கள் வெளியாகின்றன.

யாழ்ப்பாணத்தில் வாழ்வாதாரப் பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளமையையடுத்து பெற்றோரையிழந்தவர்கள் மாத்திரமல்லாமல் வறுமை காரணமாகப் பராமரிக்க முடியாத சிறுவர்களும் சிறுவர்கள் இல்லங்களில் சேர்க்கப்பட்டு வந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை சேவ் த சில்ட்ரன் இன் ஸ்ரீ லங்கா, மாவட்ட சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை மற்றும் உள்ளூர் தன்னார்வ நிறுவனங்கள் இணைந்து சிறுவர்கள் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வொன்றை நடத்தி வருகின்றன. (ச-5)

## 13 ஆவது திருத்தச் சட்டம்...

இருவரும் போரில் வெற்றி பெறுவது சாத்தியமற்றது எனக் கூறி வந்ததன் மூலம் தமிழீழத்திற்கு மறைமுகமான ஆதரவை வெளிப்படுத்தி வந்ததாகவும் தற்போது நிலைமை மாறிவிட்டதால் 13-வது திருத்தச் சட்டம் குறித்துப் பேசுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

13-வது திருத்தச் சட்டம் எவ்வாறு ஏற்றுக் கொள்ளப்பட்டது என்பது எல்லோருக்கும் தெரியும். ஜே.ஆர்.ஜெயவர்த்தன நாடாளுமன்ற உறுப்பினர்களை அச்சுறுத்தியே இந்தச் சட்டமூலத்திற்கான அனுமதியைப் பெற்றுக் கொண்டார். 13-வது திருத்தச் சட்டமானது சமஷ்டி அரசாங்கத்தை உருவாக்கக் கூடும் என எச்.என்.டி.சில்வா போன்ற சட்ட வல்லுநர்கள் குறிப்பிட்டிருந்தனர்.

13-வது திருத்தச் சட்ட மூலம் அமுல்படுத்தப்பட்டால் மாகாண சபைகளுக்குக் காணி, பொலிஸ் அதிகாரங்கள் வழங்கப்படும். அவ்வாறு அதிகாரங்களை வழங்கத் தொடங்கினால் ஈழக் கனவுக்கான ஆர்வத்தைக் கிளறிவிடுவதாகவே அது அமையும்.

தமிழீழக் கனவைக் கொண்டிருந்த பிள்ளையான் இன்று ஜனநாயக வழிக்குத் திரும்பிப் போரினால் வெற்றி பெற முடியாது என்பதைப் புரிந்து கொண்டுள்ளார்.

அவர்களால் தமது மக்களுக்கு ஜனநாயக வழிமுறைகளூடாகவே உதவி புரிய முடியும். இவ்வாறான கருத்துக்கள் மூலம் தியாகத்துடன் போர் புரியும் படையினரை ஊக்கமிழக்கச் செய்யக் கூடாது. ஜனாதிபதி இதற்கு அனுமதிக்க மாட்டார் என நான் நம்புகின்றேன் என்றார்.

இதேவேளை அதிகாரப் பரவலாக்கம் தேவையற்ற ஒன்று என குறிப்பிட்டுள்ள அவர் மாவட்ட மட்டத்தில் அதிகாரங்களைப் பகிர்வதே தற்போது தேவையானது எனவும் தெரிவித்துள்ளார். (ச-5)

## எரிபொருள்...

வைத்தியசாலைகளுக்குத் தேவையான நோய்த் தடுப்பு மருந்துகள் மற்றும் குளிர் நிலையில் வைத்துப் பேணப்பட வேண்டிய இலட்சக் கணக்கான ரூபாய் பெறுமதியான மருந்துகள் சீரான மின் விநியோகம் இன்றி பழுதடையக் கூடிய ஆபத்தான நிலைமை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்குத் தேவையான ஒரு தொகுதி எரிபொருள்கள் வவுனியாவுக்குக் கொண்டு வரப்பட்ட போதிலும் அதனை அங்கிருந்து ஓமந்தைச் சோதனைச் சாவடியூடாகக் கிளிநொச்சிக்கு எடுத்துச் செல்வதற்கான இராணுவத்தின் அனுமதியை பெறுவதில் காலதாமதம் ஏற்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதற்கான அனுமதியைப் பெறுவதற்குக் கடந்த இரண்டு வாரங்களாக அதிகாரிகள் முயன்று வருகின்றபோதிலும் அது இன்னும் கைகூடவில்லை எனவும் கூறப்பட்டது. (எ-5)

## மோதல்கள் இடம்பெறும்...

ஓமந்தைச் சோதனைச் சாவடியூடாக நாளாந்தம் 20 லொறிகளில் அத்தியாவசியப் பொருள்களை அனுப்புவது குறித்து ஏற்கனவே இராணுவத்துடன் இணக்கம் காணப்பட்டிருந்தபோதிலும் அந்த எண்ணிக்கை சரியான முறையில் பேணப்படாத நிலைமை குறித்து இந்தக் கூட்டத்தில் ஆராயப்பட்டு முடிபுகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக வவுனியா அரச அதிபர் எஸ்.சண்முகம் தெரிவித்தார்.

பொருள்களைக் கொண்டு செல்கின்ற லொறிகள் ஒழுங்காகத் திரும்பி வருவதில்லை என்பது ஒரு பிரச்சினையாக இருப்பதாக இராணுவத் தரப்பில் கூறப்பட்டது.

அது சம்பந்தமாகக் கருத்துத் தெரிவித்த அரச அதிபர், இனிமேல் அந்தப் பிரச்சினை நடக்காது எனவும் லொறிகள் மீண்டும் வவுனியாவுக்குத் திரும்பி வரும் என்பதால் 20 லொறிகள் வீதம் நாளாந்தம் பொருள்களை அனுப்புமாறும் கேட்டுக் கொண்டனர்.

இதற்கு இராணுவத் தரப்பு ஒத்துக் கொண்டிருக்கின்றார்கள். தற்செயலாக ஒன்றோடு ஒன்று தாமதமானால் அவற்றை சனிக்கிழமைகளில் அனுப்புவதாகவும் ஒத்துக் கொண்டிருக்கின்றார்கள்.

20 லொறிகள் என்று கூறும்போது உணவுப் பொருள்களும் மண்ணெண்ணெயும் அதில் அடங்கும் என தெரிவிக்கப்பட்டது. இதேவேளை தற்போது வன்னிப் பிரதேசத்தில் நிலவும் மோசமான போர்ச் சூழலில் மக்கள் இடம்பெயர்ந்து கொண்டிருக்கின்றார்கள்.

அவர்களுக்கான நிவாரணப் பணிகளை மேற்கொள்வதில் ஈடுபட்டுள்ள அரச அதிகாரிகள், அரச சார்பற்ற நிறுவனங்களின் அதிகாரிகள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கியதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வன்னிப் பிரதேசத்தில் இடம்பெறுகின்ற எறிகணைத் தாக்குதல்கள், கிளைமோர்க் கண்ணிவெடித் தாக்குதல்கள் காரணமாகத் தமது பாதுகாப்புக் குறித்து அவர்கள் கவனம் செலுத்தி இருக்கின்றார்கள்.

எனவே அவர்களின் பாதுகாப்புக்கு உத்தரவாதம் தரப்படுவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என நேற்றைய கூட்டத்தில் கோரப்பட்டிருப்பதாகவும் சில தினங்களுக்கு முன்னர் எறிகணைத் தாக்குதலில் முல்லைத்தீவு அரசாங்க அதிபர் காயமடைந்தமை குறித்தும் இராணுவ அதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டதாகவும் வவுனியா அரசாங்க அதிபர் தெரிவித்தார். (ச-5)

## கம்பஹா மற்றும் கண்டியில்...

பொலிஸ் நிலையத்தை அண்மித்த பகுதியில் பொலிஸாரும் இராணுவத்தினரும் இணைந்து நேற்று முன்தினம் இரவு சுமார் 5 மணி நேரம் வரையில் திடீர் சுற்றி வளைப்புத் தேடுதல் ஒன்றை மேற்கொண்டனர்.

இத் தேடுதலின்போது சந்தேகத்தின் பேரில் 18 தமிழர்கள் கைது செய்யப்பட்டனர். தமது அடையாளத்தை உறுதிப்படுத்த முடியாதவர்களே இத் தேடுதலின்போது சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டனர்.

இவர்கள் தொடர்ந்தும் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர். இதேவேளை நேற்று அதிகாலை கண்டிப் பொலிஸ் வளாகத்தில் பொலிஸார் மேற்கொண்ட திடீர் சுற்றி வளைப்புத் தேடுதலின்போது தமிழ் இளைஞர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர் சுமார் 27 வயதுடையவர் எனப் பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளின்போது தெரிய வந்துள்ளது. (ச-5)

## புதுக்குடி...

செல்வரத்தினம் என்பவரின் வீடுகள் முற்று முழுதாக சேதமடைந்துள்ளதுடன் பத்து வரையான வீடுகள் மற்றும் பயன்தரு மரங்கள் சேதமாகியுள்ளதாக வன்னித் தகவல்கள் தெரிவித்தன. (ச-5)

## அம்பாறை...

படையினர் மீது நேற்று பிற்பகல் 2 மணியளவில் விடுதலைப்புலிகள் மின்னல் வேக அதிரடித் தாக்குதலை நடத்தினர்.

இத் தாக்குதலில் நிமால் லுகே எனும் உயர் அதிகாரி உட்பட அதிரடிப் படையினர் மூவர் கொல்லப்பட்டுள்ளனர். மூவர் காயமடைந்துள்ளனர். (ச-5)

## மடு...

அகற்றப்பட்டுள்ளதால் தினமும் 200 பக்தர்களை அனுமதிக்கத் தீர்மானித்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ள பாதுகாப்பு அமைச்சு தேவாலயத்திற்கு வரும் பக்தர்களுக்குத் தேவையான குடிபானங்களை வழங்கப்படையினர் நடவடிக்கை எடுத்துள்ளதாகத் தெரிவித்துள்ளது. (ச-5)

இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3, 2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 12.08.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.